பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 27 செவ்வாய்க்கிழமை (12-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:16

# புலிகளின் இலட்சியத்தை அடையும் வழியாக சமாதானப் பேச்சுகளின் பெறுபேறு அமையும்

## தமிழ்ச்செல்வன் கூறுகின்றார்

வவுனியா,டிசெம்பர்12

**"சமாதானப் பேச்சுகள், அதில் வரும் முன்னேற்றங்கள் என்பன புலிகளின் போராட்ட இலட்சியங்களை அடைவதற்கான வழிமுறைகளாக அமையும்." - இவ்வாறு கூறியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

முள்ளியவளையில் அண்மையில் நடைபெற்ற போரெழுச்சிக்குழு பேராளர்கள் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

சர்வதேச நிதியுதவிகளைப் பெறுவதற்காகவே சமாதானம் என்ற முகத்திரையைப் போட்டுக்கொண்டு சந்திரிகாவும், கதிர்காமரும் வெளிநாடுகளில் பிரதிநிதிகளைச் சந்தித்து வருகின்றனர்.

அதேவேளை பாதுகாப்புப் பிரதி அமைச்சராக அனுருத்த ரத்வத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழர் விரோதப் போக்குடையவராக உள்ள பிரதமர், பௌத்த சிங்கள பேரினவாதிகளோடு போருக்கான முழுமையான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் அதில் வரும் முன்னேற்றங்கள் ஆகியன எமது போராட்ட இலட்சியங்களை அடைவதற்கான வழிமுறைகளாக அமையும். ஆனால் நாம் பலமாக இருக்க வேண்டும். நாம் வலுவான நிலையில் இருக்கும்போதே எங்களுடைய அரசியல் கோரிக்கைகள், அரசியல் அபிலாசைகள், இலட்சியம், குறிக்கோள் எல்லாமே வலுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளை குறித்து முறையிட சென்றவர் சுட்டுக்கொலை!

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு மாவட்டம் - திருப்பெருந்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் காயமடைந்தனர்.

திருப்பெருந்துறைப் பகுதியில் உள்ள விமானப்படையினரின் காவலரணுக்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் இரவு இடம்பெற்ற கொள்ளை ஒன்று தொடர்பாக விமானப் படையினரிடம் முறைப்பாடு செய்துவிட்டுத் திரும்பியோர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவநாயகம் இளங்கோ (வயது - 29) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார். தங்கராசா சந்திரகொள்ளை குறித்துகுமார் (வயது - 31), சின்னத்தம்பி

பத்மநாதன் (வயது - 30) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இதேவேளை-

(12ஆம் பக்கம் பார்க்க)

## யூரியா உரம் எடுத்து வருவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்!

### ஈ.பி.டி.பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ12

யாழ்.குடாநாட்டுக்கு யூரியா எடுத்துவர இதுவரை காலமும் விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி.அறிவித்துள்ளது

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டுக்கு உரவகைகளை எடுத்து வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தொடர்பாக கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் எம்.பியுமான கே.வி. குகேந்திரனிடம் பேச்சு நடத்தியிருந்தார். இதனையடுத்து மேற்படி விடயம் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(12ஆம் பக்கம் பார்க்க)

### படையினர் காவலில் இடம்பெற்ற

## சித்திரவதைகள் குறித்து பொலீஸ் குழு விசாரணை

யாழ்ப்பாணம்,டிசெ.12

படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் சித்திரவதைக்குள்ளானதாகக் கூறப்படும் 14 பேர் தொடர்பான விசாரணைகள் யாழ்.பொலீஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளன.

கொழும்பில் இருந்து வந்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட குழு ஒன்று இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

படையினரின் காவலில் இருந்த சமயம் உயிரிழந்த நாயன்மார்கட்டைச் சேர்ந்த இராஜரத்தினம் உதயகுமார், பொலிகண்டியைச் சேர்ந்த மைக்கல்பிள்ளை றொபேட் வெலிங்டன் ஆகியோரின் மரணம் தொடர்பாக அவர்களின் உறவினர்களின் வாக்குமூலங்களை இந்தக் குழு நேற்றுமுன்தினம் பதிவு செய்தது.

நேற்றும் வாக்குமூலம் பதிவு செய்யும் பணி தொடர்ந்தும் இடம்பெற்றது. (உ-3-5)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,டிசெ.12

காங்கேசன்துறையில் இருந்து 'லங்கா முடித்த' கப்பல் ஆயிரத்து 250 பயணிகளுடன் திருகோணமலை நோக்கி இன்று புறப்படவிருப்பதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் பயணம்செய்யப் பயணச்சீட்டுப் பெற்றவர்களைஇன்று காலை 6.30 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ்.ரயில் நிலையத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.(உ-3)

## திருமணத்தில் குண்டு வெடிப்பு! இருவர் பலி!!

வெல்லம்பிட்டியில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் திருமண வைபவம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் உயிரிழந்தனர்; 15 பேர் காயமடைந்தனர்.

இந்த வைபவத்தில் பங்குபற்றிய இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பின் எதிரொலியாகவே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## களப்பலியான நான்கு புலிகள்

வவுனியா,டிசெ.12

கடந்த 9 ஆம் திகதி தென்மராட்சி - நுணாவில் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தமது தரப்பில் உயிரிழந்த 4 பேரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்கள் பற்றிய விவரம் வருமாறு:-

- மண்மொழி (நகுலேஸ்வரன் நந்தகுமார் - கிளிநொச்சி)
- அருந்தா (தியாகரத்தினம் புஸ்பலதா - புதுக்குடியிருப்பு)
- மதிவாணி (நாகேந்திரம் ராகினி - யாழ்ப்பாணம்)
- வித்திகா(சிவலிங்கம் சிவலோஜினி - யாழ்ப்பாணம்) (உ-7-164)

### தலைநகர் கொழும்பில்

## நோர்வே மத்தியஸ்தத்தை ஆதரித்து நேற்றுப் பேரணி

கொழும்பு,டிசெ.12

நோர்வேயின் சமாதான முயற்சி தொடர வேண்டும் என்றும் -

யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும் என்றும் -

கோஷம் எழுப்பியவாறு ஆயிரக்கணக்கானவர்கள் நேற்றுக் கொழும்பில் பேரணி ஒன்றை நடத்தினர்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் 20 அரசசார்பற்ற அமைப்புக்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் நேற்றுக் காலை முதல் விகாரமாதேவி பூங்காவில் ஒன்று கூடினர்.

பூங்காவைச் சுற்றி கோஷங்களை எழுப்பியவாறு வலம்வந்த அவர்கள் ஊர்வலமாக வாட்பிளேசில் உள்ள நோர்வே தூதரகத்துக்குச் சென்றனர்.

நோர்வே முன்னெடுத்துள்ள சமாதான முயற்சிகளைக் கைவிடக் கூடாது என்று அவர்கள் அங்கு கோஷம் எழுப்பினர்.

இந்தப் பேரணியில் காணாமற்போன படையினரின் உறவினர்களே பெருமளவில் பங்குபற்றினர்.

காணமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கத்தின் தலைவர் நாணயக்காரவின் தலைமையிலான குழு ஒன்று நோர்வே தூதுவர் ஜோர்ஜ் வெயிட் வோர்க்கைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தது.

அங்கு உரையாற்றிய தூதுவர் தெரிவித்ததாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாடு தழுவிய ரீதியில் ஜே.வி.பி நாளை முதல் போராட்டம்!

கொழும்பு,டிசெ.12

எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்தி மக்கள் மீது பெரும் சுமையை அரசு சுமத்தியுள்ளதைக் கண்டித்து, நாடு தழுவிய போராட்ட இயக்கம் ஒன்றை ஜே.வி.பி. நாளை ஆரம்பிக்கின்றது.

முதலாவது போராட்டம் நாளை பிற்பகல் கொழும்பு ஹைட்பார்க்கில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்ந்து சகல நகரங்களிலும் இடம் பெறும் என்று அந்த அமைப்பின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ-3-20)

### சம்பள மற்றும்

## இடர்காலக் கொடுப்பனவு நிலுவை ஆசிரியர்களுக்கு இம்மாதத்தில்!

கொழும்பு,டிசெ.12

வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்படாமலிருக்கும் சம்பள நிலுவைகள் மற்றும் இடர்காலக் கொடுப்பனவுகள் அனைத்தும் இந்த மாதச் சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நிதியை திறைசேரி வடக்கு- கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் பிரதம கணக்காளருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கொடுப்பனவுகளுடன் இதுவரை காலமும் வழங்கப்படாதிருக்கும் பதவியுயர்வுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இடர்காலக்கொடுப்பனவு வழங்கல் மற்றும் வடக்கு- கிழக்கு மாகாணக் கல்விநிலை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அண்மையில் கல்வியமைச்சரைச் சந்தித்துப் பேசியமை தெரிந்ததே.(உ-7)

## இணுவில் சம்பவத்தில் அர்ச்சுனன் உயிரிழப்பு?

கொழும்பு,டிசெ.12

இணுவில் சிவகாமி அம்மன்கோயில் பின் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த அர்ச்சுனன் என்பவர் உயிரிழந்தார் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அங்கு இடம்பெற்ற மோதலை அடுத்து அருகில் இருந்த வீட்டைச் சோதனை செய்த சமயம் அவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் -

அத்துடன் பிஸ்டல் ஒன்று, ஒரு கிரனேட், தொலைத் தொடர்புக் கருவி ஆகியன கைப்பற்றப்பட்டதாகவும் -

தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

அரியாலை, நுணாவில் மேற்கு, முகமாலை, கிளாலி ஆகிய இடங்களில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் பதினொரு விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும் -

ஓர் அதிகாரியும் ஒரு சிப்பாயும் காயமடைந்தனர் என்றும் - தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

# நினைவில் நிற்கும் 20 ஆண்டுகள்



மலர்வு
20
-
12
-
1943

உதிர்வு
12
-
12
-
1980

## அமரர் சம்பந்தர் திருமூர்த்தி

அப்பா!

ஒளிமயமாக இருந்த எம் வாழ்வு
உங்களை இழந்து இருள் சூழ்ந்தது!
ஆயினும் உங்கள் நினைவு எனும்
ஒளியுடன் எம் வாழ்வு.....!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

*புகையிரத வீதி,*
*கோண்டாவில்.*

**மனைவி, மகன்,**
**உறவினர்.**

(C/14264)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாநகரசபையில் நீண்டகாலமாகக் கடமையாற்றியவரும், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் திருகோணமலை நகரசபையின் செயலாளராகக் கடமையாற்றி இளைப்பாறியவருமான

## அமரர் மளவராயர் வேலுப்பிள்ளை

அவர்கள் 10.12.2000 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்ததுடன் அமரரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**மாநகரசபை - யாழ்ப்பாணம்.**

(C/14262)

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் ஆறுமுகம்

(கார்க்கார அருளம்பலம்)

காரைநகர் இலகடியைப் பிறப்பிடமாகவும் தற்போது ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் ஆறுமுகம் நேற்று (11.12.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பகவதியின் அன்புக் கணவரும், கந்தசாமி (கருணா ஸ்ரோர்ஸ் - வவுனியா) காலஞ்சென்ற சின்னராசா (யூனிற் ரெக்ஸ்ரைல் - வவுனியா), காலஞ்சென்ற கோபாலன் மற்றும் யோகராசா (நோர்வே), பகீரதன் (பகவதிகளஞ்சியம் - சங்கானை), பாலசுப்பிரமணியம் (மொடேண் ஸ்ரோர்ஸ் - வவுனியா), நாகரத்தினம் (பகவதி ஸ்ரோர்ஸ்- ஆனைக்கோட்டை), காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளி இன்று (12.12.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**ஆறுமுகம் நாகரத்தினம்** (மகன்)

*பகவதி ஸ்ரோர்ஸ்,*
*ஆறுகால் மடம்,*
*ஆனைக்கோட்டை.*

(C/14268)

## செல்லையா தங்கராசா

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் நந்தாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தங்கராசா நேற்று (11.12.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - லட்சுமியின் அன்பு மகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் நேசராணி, காலஞ்சென்ற தனபாலன் மற்றும் ஜெயபாலகிருஷ்ணன், ஜெயசுப்பிரமணியம் (கருமாரி மோட்டோர்ஸ்), ஜெயரட்ணம் (கனடா), வீரபத்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பென்சமின், இராசரட்ணம், நடராசா, மகேஸ்வரி, றோகினி, சசி (கனடா), தேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் அருளம்பலம் (பிரான்ஸ்), ஆச்சிப்பிள்ளை, கமலம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற அன்னம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னம்மா (பிரான்ஸ்), நேசம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் நாதன், கந்தையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.12.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு (புதிய நேரம்) தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**த.நாகரத்தினம் (மனைவி),**
**த.ஜெயபாலகிருஷ்ணன் (சின்னராசா - மகன்)**

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(C/14269)

## தென்மராட்சி மாணவருக்கு

தென்மராட்சி,டிசெ.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அல்லது இடம் பெயர்ந்து வேறு வலயப் பாடசாலைகளில் தரம் 9 இல் கற்கும் மாணவர்கள் அனைவரையும் தத்தமது கணிப்பீட்டுப் புள்ளிகள்,தரம் 9இற்கு கணிப்பீட்டு இறுதிப் புள்ளி ஆகியவற்றுடன் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(உ-117)


**எமது ஒறிஜினல் வீடியோ CD வெளியீடுகள்**

- சத்திரியன் - விஜயகாந்த்
- அம்மன்
- மகாதேவி
- வெள்ளிக்கிழமை விரதம்
- கோலாலம்பூரில் நடைபெற்ற நடிக நடிகையர் இசை நிகழ்ச்சி உன்னிமேனன் இசைவிருந்து
- ஒருதலைராகம்
- உறவு காத்த கிளி
- தங்கைக்கோர் கீதம்
- அனார்கலி
- பாபு

(C/14267)

**நரேன் வீடியோ சென்ரர்**
140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**COMPUTER FOR KIDS**
கணனியூடான கற்பித்தல் முறைமைகள்
காலம் :13-12-2000 9:30 AM
16-12-2000 3:30 PM
கட்டணம்: இலவசம்
Director
324, Palaly Rd
Jaffna
(C/14265)

வடமராட்சிக்கு வருகிறார்.....
யாழ்நகர் முன்னணி ஆசிரியர்...!!
**B.பசில்**
**வர்த்தகம்**
13.12.2K (ந.ப. 12.00)
**கிறிஸ்ரல் சென்ரர்**
**நெல்லியடி.**
(81584)

**ராஜா** யாழ்ப்பாணம்
அஜித் (இரு வேடம்)
சிம்ரன், ஜோதிகா,
விவேக்
மற்றும் பலரின் நடிப்பில்
**வாலி**
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
(C/14247)

**நாகம்ஸ் சினிமா**
கன்னாகம்
விஜய், ஜோதிகா
நடித்த
S.J.சூர்யாவின்
**குஷி**
தினசரி - 11.00, 2.30 (பு.நே.)
(81590)


ஸ்ரீ ராம ஜெயம்

# ஆத்மார்த்த அஞ்சலி

30.11.2000 அன்று சிவபதமடைந்த
எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய

## பிரம்மஸ்ரீ ஷ.ஷண்முகசுந்தரக் குருக்கள்

(மூளாய்)

அவர்களின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்தனை செய்வதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

***சி.வரதராஜக்குருக்கள் குடும்பத்தினர்,***
***சுழிபுரம்.***

(81591)

# மரண அறிவித்தல்கள்

## அதி ரீச்சர்

இன்பகம் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **L.S.** அதிசயம் ராஜா (அதி அக்கா, இளைப்பாறிய ஆசிரியர்) நேற்று (11.12.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை ராஜாவின் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும் **U.K** ஐ வசிப்பிடமாகக் கொண்வர்களான ரவீந்திரன், இன்பராஜ் ஆகியோரின் தாயாரும் வசந்தமனோகரி, அனுராதா ஆகியோரின் மாமியாரும் சுதர்சன், காருண்ஜா, கபில்ராஜ், தர்மஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*இன்பகம்,*
*உடுப்பிட்டி.*
(81583)

தகவல்:
வே.ராஜா (கணவர்)

## சிற்றம்பலம் கணேசநாதன்

(பணியாளர், ப.நோ.கூ.சங்கம் - சுன்னாகம்)

ஐயனார் கோயிலடி, சுன்னாகத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் கணேசநாதன் நேற்றுமுன்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சிற்றம்பலத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி ஐயாத்தரையின் (பூசகர்) அன்பு மருமகனும் சந்திரவதனாவின் அன்புக் கணவரும் தேவசேனானி, பாலசேனானி (மாணவர்கள், திருஞானசம்பந்தா வித்தியாசாலை - சுன்னாகம்) ஆகியோரின் அருமைத் தந்தையும் கந்தசாமியின் (பூசகர், ஐயனார் தேவஸ்தானம்- சுன்னாகம்) மைத்துனரும் திருமதி புஸ்பராணி கந்தசாமியின் சகோதரனும் ஹேமலதா, மணிவண்ணன், ரதிகலா, அரிகரசுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.12.2000) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சுன்னாகம் கோத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயனார் கோயிலடி,*
*சுன்னாகம்.*
(81589)

தகவல்:
**சீ.ஐ.கந்தசாமி (பூசகர்)**

## கந்தையா சின்னத்தம்பி

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தம்பி நேற்று (11.12.2000) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் குசலகுமாரி, ரவிச்சந்திரன் (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தந்தையும் நேசரத்தினத்தின் (கனடா) அன்பு மாமனாரும் திருமதி சிவபாக்கியம் கந்தையா (கனடா), திருமதி இரத்தினம் மகாதேவன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதல, மகாதேவன், திருமதி வவி பாலசுப்பிரமணியம், பாக்கியநாதன் ஆ யோரின் மைத்துனரும தினேஷா, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*
(81593)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

## வயிரவநாதன் வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட எழுது வினைஞரும், சமாதான நீதிவானும்)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவநாதன் வேலுப்பிள்ளை நேற்று (11.12.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் வயிரவநாதன் பெண் சோதிப்பிள்ளையின் அன்பு மகனும் நவமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), க.மகேஸ்வரி, ஆறுமுகம் (அதிபர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி), கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலேந்திரா (கனடா), நாகேந்திரா (தொழில நுட்பக் கல்லூரி - கொக்குவில்), ராஜேந்திரா (பொது சுகாதாரப் பரிசோதகர்- அச்சுவேலி), குபேந்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவகி (கனடா), கிசோர் (ஆவரங்கால்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**

*ஆவரங்கால்.*
(81594)

## திருமதி சிவலிங்கம் அன்னம்மா

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி சிவலிங்கம் அன்னம்மா நேற்று (11.12.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் பொன்ரதம், சுபாசந்திரபோஸ், பாலகௌரி, கலைவாணி, சிவரூபி, சிவராணி, சிவகரன், சிவகனி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆனந்தன், செல்வராணி, தர்மலிங்கம், மோகனராசா, மகிமராஜன், தங்கராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகுரு லேன்,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
(81595)

தகவல்:
***சிவகரன்*** (மகன்)

# உதயன்

## தளர்வு வந்தால்....

இலங்கைக்கு உதவும் — நிதி உதவி வழங்கும் — நாடுகளின் பாரிஸ் மாநாடு எதிர் வரும் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் நடைபெறவுள்ளது.

அனேகமாக, பாரிஸ் மாநாடு தொடங்குவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே, சமாதானத்திலேயே தாம் நாட்டங்கொண்டுள்ளதாகவும், தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப்போவதாகவும் அரசாங்கத் தரப்பினர் பேசிக் கொள்வது உண்டு.

மாநாடு முடிவுற்று பணம் கிடைத்த பின்னர், கூறியதை மறந்து— உதாசீனம் செய்து— போரைத் தீவிரப்படுத்துவதிலும் அதற்காகப் பணத்தைச் செலவிடுவதிலும் செயற்படுவது வழமை.

சென்ற வருடங்களைப் போன்ற ஒரு 'நடிப்புடனேயே' அரசு இப்போதும் சமாதான முயற்சிகளில் ஈடுபாடு காட்டி வருகிறதோ என்ற சந்தேகம் எவருக்கும் எழுவது இயல்பே. இதே சந்தேகம் நிதி உதவி வழங்கும் மேற்கு நாடுகளின் இலங்கைத் தூதர்களுக்கும் இம்முறை ஏற்பட்டிருக்கிறது!

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறீர்கள். அதன் விளைவாக பேச்சுக்களை ஆரம்பிப்பதாக இருந்தால், தொடர்ந்தும் போரை மேற்கொள்வது ஏன்? — என்று மேற்கு நாட்டுத் தூதர்கள், தம்மைச் சந்தித்த அரசாங்கக் குழுவினரிடம் கேள்வி எழுப்பி உள்ளார்கள்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக அரசாங்கத்திற்குள் பொது நிலைப்பாடு இல்லாதது ஏன்? — என்பது மேற்கு நாட்டுத் தூதுவர்கள் கேட்ட மற்றொரு முக்கியமான கேள்வி.

இந்தக் கேள்விகளுக்கும் தூதுவர்களின் ஏனைய கேள்விகளுக்கும் அரச தரப்புக் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்ற அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் பதிலளித்திருக்கிறார்.

எவரும் தாம் வழங்கும் நிதி உதவி — தாம் அன்பளிப்புச் செய்யும் பணம் — உரிய முறையில், பயனுள்ள வகையில் செலவிடப்படுவதையே விரும்புவர். இது வரை காலமும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு வழங்கும் நிதி உதவி குறித்து — அது எவ்வாறு செலவு செய்யப்படுகிறது என்பதனை — அறிய விரும்பியதோ இல்லையோ, இப்போது அதில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது என்பதனை ஊகிக்கமுடிகிறது.

பேச்சுவார்த்தை நடத்துவதிலும், போரை நிறுத்துவதிலும் அரசாங்கம் தளர்வடையக் கூடாது; உறுதியாக இருக்க வேண்டும் என்பதில் மேற்கு நாடுகள் முன்னரை விட இப்போது அதிக அக்கறை காட்டுகின்றன; வெளிநாட்டுத் தூதுவர்கள் — அரச குழுவினரின் சந்திப்பில் இருந்து இது வெளிச்சமாகிறது.

இது இலங்கை அரசாங்கத்தின் மீதான ஓர் அழுத்தமாக மாறினால் நல்ல விளைவுக்கு நிச்சயம் வித்திடும்.

பணம் இல்லாதவன் பிணம் என்பதனை உணராது, தெற்கின் பேரினவாதிகள் சமாதான முயற்சிகளுக்கும் போர் நிறுத்தத்துக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும். ஆனால் ஆட்சி நடத்தும் அரசியல் தலைவர்கள் எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாமல் செயற்படுவதற்கு பண விடயத்தில் அழுத்தம் தேவை.

மேற்கு நாடுகள் கண்டிப்பாக இருப்பதாகக் காட்டிக்கொண்டு, செயலளவில் தளர்ந்து போனால் அரசாங்கம் பழைய பல்லவியையே பாடத் தொடங்கும். அதுவும் நிச்சயம்!

# குடாநாட்டுக்கு யூரியா எடுத்துவர

# பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ். மாவட்ட விவசாய செய்கைக்குத் தேவையான யூரியா பசளையை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளதாக கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்குத் தேவையான யூரியாவை எடுத்து வருவதற்கான அனுமதி வழங்கக்கோரி கமநல சேவைகள் திணைக்களம் கடந்த நவம்பர் மாதமே பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்திருந்தது. ஆனால் தற்போது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் மற்றும் யாழ். சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் திலகரட்ணா போன்றோரின் சிபார்சுடன் யூரியா உரப்பசளைக்கு விண்ணப்பித்தபோதும் பாதுகாப்பு அமைச்சு அதனை நிராகரித்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

குடாநாட்டில் தற்பொழுது ஆரம்பிக்கப்படவுள்ள மேட்டு நிலச் செய்கைக்கு யூரியா உரம் அதிகமாகத் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து யூரியாவை எடுத்து வருவது நீண்ட காலமாகத் தடை செய்யப்பட்டிருந்தபோதிலும் குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் — 1996 ஆம் ஆண்டிலிருந்து — யூரியா பசளையை எடுத்து வர அனுமதி அளிக்கப்பட்டு வந்தது எனினும் தற்போது அது திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

கமநல சேவை நிலையத்தினால் கடந்த நான்கு வருடங்களில் 5 ஆயிரத்து 410 மெ. தொன் யூரியா கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது யூரியாவை கொண்டுவருவதில் ஏற்பட்ட தடை காரணமாக விவசாயச்செய்கையில் பாதிப்பு ஏற்படலாம் என்று விவசாய திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யூரியாவுக்கு பதிலாக விவசாயிகள் அமோனியா உரத்தினை பயன்படுத்த முடியும் என்றாலும் அமோனியாவில் இருந்து முழுமையான பயனைப் பெறமுடியாது என்று விவசாய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ம-5-6)

## கட்டடத் திறப்பு விழா

தொல்புரம் அ. மி. த. க. பாடசாலையில் தரம் 2 இற்கான மறுசீரமைப்புக்காக அமைக்கப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-3)

## சமய சந்நிதியில்

வட்டுக்கோட்டை ஸ்ரீ மாமரப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை விநாயகர் விரதம் பிள்ளையார் பெரும் கதைப் படிப்பு என்பன ஆரம்பமாகித் தொடர்ந்து 21 தினங்கள் இடம்பெறும். (ம-30)

★ ★ ★

வட்டுக்கோட்டை ஸ்ரீ விசாலாட்சி சமேத காசிவிசுவநாத சிவன் கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை விநாயகர் விரதமும் பிள்ளையார் பெருங் கதைப் படிப்பு ஆரம்பமாகித் தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும். (ம-30)

## நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 12

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவோருக்கான நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்குப் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம், ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு அமைப்பாளர் நவநீதன் (மோகன்) மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர். (உ-7)

## மற்றொருவருக்கு டெங்குக் காய்ச்சல்

யாழ்ப்பாணம், டிசெ 12

டெங்கு காய்ச்சல் என சந்தேகிக்கப்படும் மற்றுமொருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அல்லைப்பிட்டி, 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அருளானந்தன் மேரி றெஜினா (வயது 18) என்ற இளம் பெண்ணே இந் நோயாளி ஆவார். (இ-15)

# பொன். இராமநாதன் குருபூசையை

# பல்கலை. பொறுப்பேற்க வேண்டும்

## நினைவு தின விழாவில் பேராசிரியர் சிற்றம்பலம் உரை

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தனது பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை வழங்கிய சேர் பொன். இராமநாதன் குருபூசையை யாழ். பல்கலைக்கழகம் உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்று வருடாந்தம் பெரிய அளவில் கொண்டாட வேண்டும் அத்துடன் அவரது பல்கலைக்கழக முன்றலில் அவருக்கு வெண்கலத்தினாலான சிலை ஒன்றை நிறுவவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

சேர் பொன். இராமநாதனின் நினைவு தினவிழாவில் கலந்து கொண்டு பேசிய யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் இ. க. சிற்றம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக இந்து மன்றம் பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை, பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை ஆகியவற்றின் ஆதரவில் கடந்த முதலாம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்துமன்றத் தலைவர் க. சிவானந்தன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் இ. க. சிற்றம்பலம் மேலும் தெரிவித்ததாவது:-

18 ஆம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் ஆற்றிய சமயப் பணிகள் யாழ்ப்பாணத்தில் இந்து மதத்தினதும் தமிழ் மொழியினதும் மறுமலர்ச்சிக்கு வித்திட்டன. இதே போல் 19 ஆம் நூற்றாண்டில் சேர் பொன். இராமநாதன் ஆற்றிய சமய கல்விப்பணிகள் எமது மக்களின் வாழ்வில் புதியதொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்றால் மிகையல்ல. தமது இறுதிக்காலத்தில் யோகியாக வாழ்ந்த இவரது வாழ்க்கை எல்லோராலும் பின்பற்றத்தக்கதாகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கொழும்பில் சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போது லண்டனுக்குச் சென்று அங்குள்ள ஆட்சியாளர்களுடன் வாதாடி அவர்களை விடுவித்தவர் அமரர் சேர் பொன். இராமநாதன். அப்போது முதலாவது உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்தது. உயிரையும் பொருட்படுத்தாது லண்டன் சென்று தமது தலைவர்களின் விடுதலைக்கு வழிவகுத்தவர் சேர் பொன். இராமநாதன். அவர் கொழும்புக்குத் திரும்பிய போதும் குதிரை வண்டியில் ஏற்றி வீதிகள் வழியாக இழுத்து வந்தார்கள் சிங்கள மக்கள்.

அவர் ஆற்றிய அரசியல், சமூக, சமயப் பணிகளை நாம் என்றும் மறந்துவிட முடியாது.

இந்த நாட்டில் அரசியல் ரீதியாக, சமய ரீதியாக, கலாசார ரீதியாக அவர் ஆற்றிய பணிகள் நன்கு ஆராயப்பட வேண்டும். இந்து சமயத்தின் வளர்ச்சிக்கும், கல்விக்கும் அவர் ஆற்றிய சேவைகள் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவையாகும்.

கொழும்பில் பிறந்த சேர். பொன் இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தின் மீது அதிக அக்கறை கொண்டவராக விளங்கினார். தமிழ் பெண் பிள்ளைகளின் கல்விப் பாரம்பரியம் தனித்துவமாகப் பேணப்படவேண்டும் என்ற குறிக்கோளுடன் 1913 ஆம் ஆண்டில் மருதனார்மடத்தில் இவர் நிறுவிய இராமநாதன் மகளிர் கல்லூரி இன்றும் தனது சிறப்பியல்புகளுடன் இயங்கி வருகின்றது.

ஆண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருதி 1921 ஆம் ஆண்டில் இவரால் 28 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பரந்த நிலப்பரப்பில் நிறுவப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக பரிணமித்தது. அத்துடன் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தையும் இங்கு இவரே ஆரம்பித்தார். அரசியலையும் ஆத்மீகத்தையும் இணைந்து வாழ்ந்த இவர் கொழும்பில் கொட்டாஞ்சேனையில் சிறப்பு வேலைப்பாடுகளுடன் கூடிய பிரசித்தி பெற்ற ஆலயமான பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை நிறுவினார். அத்துடன் கொழும்பில் உள்ள தமிழ் மகளிரின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு இராமநாதன் மகளிர் கல்லூரியையும் அங்கு நிறுவினார்.

கலாசார விடயங்களில் அதிக கவனம் செலுத்திய இவர் கூத்துவங்களிலும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார்.

அவர் விட்டுச்சென்ற பணிகள் இன்றைய சூழலிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் செய்த போது கொழும்பில் அவருக்கு வரவேற்பளிப்பதில் முன்னின்று செயற்பட்டவர் இவர். நாவலருக்குப் பின்பு இந்தியாவில் தமிழ் நாட்டில் நன்கு அறியப்பட்ட, மதிக்கப்பட்ட இந்துவாக விளங்கியவர் சேர். பொன். இராமநாதன்.

சிதம்பரத்தில் நடந்த சைவ சித்தாந்த மாநாட்டிற்கு அவர் தலைமை வகித்து உரையாற்றியுள்ளார். சர்வதேச ரீதியில் இந்து மதக் கருத்துக்களை பரப்புவதிலும் இவர் முன்னின்று உழைத்துள்ளார்.

எமது எதிர்கால சந்ததியினரும் அறியும் விதத்தில் இவரது வரலாற்று நூல்களை மறுபிரசுரம் செய்ய வேண்டும். இதுவே எமது யாழ். பல்கலைக்கழகம் சேர் பொன் இராமநாதன் அவர்களுக்கு ஆற்றும் இறந்த அஞ்சலி என்று நான் கருதுகின்றேன்.

இந்த விழாவில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில்:-

அந்நியர் ஆட்சிக்காலத்தில் தமிழும் சைவமும் பாதிப்புற்ற வேளையில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் மேற்கொண்ட சேவைகள், ஆற்றிய பணிகள் போற்றப்பட வேண்டியவை. நாடு சுதந்திரமடைந்த பின்பும் எமது சமூகத்திற்கு இவரைப்போல சேவையாற்றக் கூடிய பெரியார்களின் சேவை தேவைப்படுகின்றது. தற்போது தளர்ச்சியடைந்துள்ள இப்பணிகள் மேலும் உத்வேகம் பெற வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணஐயர் உரையாற்றுகையில்:-

ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தை இங்கு நிறுவியதுடன் இப்பல்கலைக்கழகம் உருவாகுவதற்கு கால்கோள் இட்ட இப்பெரியார் ஒரு குருவைப் போல போற்றுவதற்கு உரித்தானவர். தமது இறுதிக்காலத்தில் துறவி போல வாழ்ந்து சைவத்தின் வளர்ச்சிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த பெருந்தகை இவர்'' என்றார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் கே. பாலச்சந்திரனும் உரையாற்றினார். குருகுல மாணவர்களின் சமஸ்கிருதப் பேச்சும் இடம்பெற்றது இறுதியில் இசைக் கச்சேரி நடைபெற்றது. (ம-135)

## நாளை

கார்த்திகை 28
புதன்கிழமை
திதி: துதியை
முற்பகல் 11.40 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
முற்பகல் 9.05 வரை.
சுபநேரம்: 4.51 - 6.21
ராகுகாலம் 12.21 - 1.51
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அதிகம் அறிந்தவன் குறைவாய்ப் பேசுவான்.

-பிரான்ஸ் பழமொழி-

# டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகளும் அதனைக்கட்டுப்படுத்தும் முறைகளும்

தென்னிலங்கையில் 40க்கு மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்ட டெங்குக் காய்ச்சல் குடாநாட்டிலும் பரவி இருப்பது இரத்தப் பரிசோதனை மூலம் தற்போது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

டெங்குக் காய்ச்சலை எப்படிக் கட்டுப்படுத்தலாம்? டெங்குக் காய்ச்சல் அறிகுறிகள் என்ன என்பதை இந்தக் கட்டுரை விளக்குகிறது.

இலங்கையின் தென்பகுதியில் டெங்குக் காய்ச்சல் (Dengue Fever) எனப்படும் நுளம்பினால் பரவும் ஒரு வகை தொற்றுநோய் விரைவாகப் பரவி வருவது நாம் அறிந்ததே. இந்த நோயினால் பாதிக்கப்பட்டு ஏற்கனவே சிலர் மரணமடைந்தும் உள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலையிலும் ஓரிரு நோயாளிகளுக்கு டெங்குக் காய்ச்சலுக்குரிய ஆரம்ப அறிகுறிகள் இனங் காணப்பட்டுள்ளன, ஒருவருடைய இரத்த மாதிரி கொழும்புக்கு அனுப்பப்பட்டு அவருக்கு ஏற்பட்டிருப்பது டெங்குக் காய்ச்சல் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இத்தருணத்தில் நாம் அனைவரும் டெங்குக் காய்ச்சலைப் பற்றியும் அதன் அறிகுறிகள், பரவும் முறைகள், தடுப்பு முறைகள் பற்றியும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகவுள்ளது.

டெங்குக் காய்ச்சல் ஒரு வகை வைரசினினால் (Arbovitus) ஏற்படுவதன் காரணமாக இந்தநோய் ஒருவருக்கு ஏற்படின் அதனைக் குணப்படுத்தக்கூடிய நுண்ணுயிர் கொல்லிகள் (Antibiotics) இல்லை. அத்துடன் இந்த நோயினால் ஒரு முறை பாதிக்கப்படும் ஒருவர் 9 மாதங்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெறுகின்ற போதிலும் இந்த நோயை ஏற்படுத்தும் வைரஸ் நான்கு பிரிவுகளாக (Sero types) இருப்பதால் மற்றைய பிரிவுகளைச் சேர்ந்த வைரஸால் மீண்டும் மீண்டும் நோயாளி பாதிக்கப்படலாம்.

## நுளம்பே நோய்க்காவி

எனவே டெங்குக்காய்ச்சலை ஒரிவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரப்பும் நோய்க்காவியான நுளம்பின் பெருக்கத்தினைத் தடுப்பதன் மூலமே இந்தநோயைக் கட்டுப்படுத்தலாம். டெங்குக் காய்ச்சல் எடிஸ் அகிப்றி (Ades aegypti), எடிஸ் அல்போடிக்றஸ் (Ades albopictus) போன்றநுளம்பினங்களினால் பரப்பப்படுகின்ற போதிலும் எடிஸ் அகிப்றியே (Ades aegyti) இந்த நோயை முக்கியமாகப் பரப்புகிறது. அத்துடன் இந்த நுளம்புகள் யாழ். குடாநாட்டிலும் பரவலாகக் காணப்படுகின்றன. எடிஸ் அகிப்றியின் (Ades aiegypti) உடல் கறுப்பு நிற பின்னணியில் வெண்ணிறக் கோடுகளைக் கொண்டிருப்பதனால் இதனை இலகுவாக மற்ற வகை நுளம்புகளிடமிருந்து வேறுபடுத்தலாம். இக் கோடுகள் காரணமாக இவ்வை புலிநுளம்புகள் (Tiger Mosguito) எனவும் அழைக்கப்படுவதுண்டு. இவ்வகை நுளம்புகள் பெரும்பாலும் காலையிலும் மாலையிலும் குருதி உறிஞ்சும் இயல்புடையவை.

## சுத்தம் அவசியம்

இந்த நுளம்புகள் நீர் தேங்கியுள்ள சிரட்டைகள், வெற்றுத் தகரடப்பாக்கள், உடைந்த போத்தல்கள், மண் பானைச் சட்டிகள், மரப் பொந்துகள், தென்னம் கோம்பைகள், பழைய டயர்கள், வெற்றுத்தீப்பெட்டிகள், பூச்சாடிகள் போன்ற வீட்டைச் சூழ்ந்துள்ள செயற்கையான நீர் தேங்கியுள்ள பொருள்களையே தமது வாழ்விடமாக கொண்டுள்ளன.

அத்துடன் இவை தமது வாழ்விடத்திலிருந்து நீண்ட தூரப்பகுதிக்கும் பறந்தும் செல்வதில்லை. எடிஸ் அகிப்றி

டாக்டர் **க. கணேஸ்வரராஜா**

(சுகாதார வைத்திய அதிகாரி, மானிப்பாய்)

நுளம்பின் இவ்வகை இயல்புகள் காரணமாக ஒவ்வொரு வீட்டையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருப்பதனால் டெங்குக் காய்ச்சல் பரவாது, தடுக்கலாம்.

டெங்குக் காய்ச்சல் வைரஸ் ஒருவருக்கு தொற்றியதிலிருந்து நோய் ஏற்பட ஏறக்குறைய 5 — 6 நாள்கள் எடுக்கும். டெங்குக்காய்ச்சலால் பாதிக்கப்படும் எல்லோருக்கும் நோய் அறிகுறிகள் வெளிக் காட்டப்படுவதில்லை என்பதுடன் நோய் அறிகுறிகள் வெளிக்காட்டப்படும் எல்லா நோயாளிகளிலும் டெங்குக் காய்ச்சலுக்குரிய விசேட அறிகுறிகள் காணப்படுவதில்லை என்பதால் டெங்குக் காய்ச்சலை ஆரம்ப நோய் அறிகுறிகளை மட்டும் வைத்து அடையாளம் காண்பது இலகுவானதன்று.

## ஆரம்ப அறிகுறிகள்

டெங்குக் காய்ச்சலுக்குரிய சாதாரண ஆரம்ப அறிகுறிகளாக, பொதுவாக 5–7 நாள்களுக்கு நீடிக்கும் கடும் காய்ச்சல், தலைவலி, வாந்தி, உடல் வலி, மூட்டு தசை நோ, வயிற்றுளைச்சல் என்பன இருக்கும். நோயின் பிந்திய நிலைகளில் மேற்கூறிய அறிகுறிகளுடன் —

★ தோலின் அடியில் சிறிய இரத்த (சிவப்பு) அடையாளம்.

★ கண்கள் சிவப்பு நிறமாதல், கண்களிலிருந்து நீர் வடிதல்.

★ மூக்கினால் இரத்தம் கொட்டுதல்.

★ மலசலத்தோடு இரத்தம் வெளியாதல்.

★ முரசினால் இரத்தம் வெளியாதல்.

★ வாந்தி அல்லது மலம் கறுப்பு அல்லது செம்பட்டை நிறமாதல். போன்றவையும் ஏற்படலாம்.

டெங்குக் காய்ச்சல் பொதுவாக 5–7 நாள்களில் குணமடையலாம், அல்லது நோயின் பிந்திய அறிகுறிகளுடன் நோயின் பாதிப்பு கூடிய நிலைகளாக டெங்கு இரத்தப் பெருக்கு காய்ச்சல் (Dengue haemorrhogic fever) டெங்கு அதிர்ச்சிநிலை (Dngue Shock) என்பனவற்றை அடைந்து இறுதியில் மரணம் சம்பவிக்கலாம்.

இந்த நோய் அறிகுறிகள் தென்பட்டதும் உடனடியாக நோயாளி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும். இந்த நோய் வைரஸால்ஏற்படுவதால்இதற்குரியமருந்துகள்எதுவுமில்லை. எனவே நோய் வரமுன் பாதுகாப்பதே மிகச் சிறந்தது.

## நுளம்பை ஒழிக்க என்ன செய்ய வேண்டும்?

இதன் பொருட்டு பின்வரும் முறைகள் மூலம் இந் நோயை பரப்பும்நுளம்பினமானஎடிஸ் அகிப்றியின் (Adesaegypti) வாழ்விடங்களை இல்லாதொழிக்க வேண்டும்.

1. வீட்டின் சுற்றுப்புறத்தை துப்புரவாக வைத்துக் கொள்ளுங்கள்.

2. குப்பை கூளங்களை எரித்து அல்லது புதைத்து விடுங்கள்.

3. குரும்பைக் கோம்பைக்குள் தண்ணீர் தேங்காமல் அதனைத் துண்டு துண்டாக வெட்டி விடுங்கள்.

4. வெற்றுத் தகரடப்பா, சிரட்டைகள், சட்டி, பானைத் துண்டுகள், வெற்றுத் தயிர்ச் சட்டிகள் என்பவற்றை உடைத்து விடுங்கள்.

5. பூச்சாடிகள் எறும்புப் பொந்துகள் என்பவற்றில் உப்புக்கட்டிகள் சிறிது போடுங்கள் பூச்சாடிகளின் நீரை அடிக்கடி மாற்றி விடுங்கள்.

6. வீட்டுக் கூரைகளிலும், சுற்றுப்புறங்களிலும் இருக்கும் பழைய டயர்களில் மண் நிறையுங்கள், இல்லையென்றால் தண்ணீர் நிற்காமல் ஓட்டை போட்டு விடுங்கள்.

7. கூரைகளில் தகரப்பீலிக்குள் தண்ணீர் தேங்கி நிற்காதவாறு அதற்குள்ளிருக்கும் குப்பை கூளங்களை அகற்றி விடுங்கள்.

மேற்கூறிய செயற்பாடுகளை ஒவ்வொரு குடும்பத்தினரும், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை, மதநிலையங்கள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்றவற்றுடன் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே எமது பிரதேசங்களில் டெங்குக் காய்ச்சல் பரவாது தடுக்கலாம்.

★

# தொழில்நுட்பஉதவியாளர் பதவி; விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கொழும்பு, டிசெ. 12

இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் ஜி. சி. ஈ. உயர்தரம் சித்தியடைந்தவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம், 230. பௌத்தலோக்க மாவத்தை, கொழும்பு — 07 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் உரிய இடத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

இது தொடர்பான வர்த்தகமானி அறிவித்தலை கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ்ஸ்பொட்டின் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்

(ம)

# அரச காணி விவரம் திரட்டு

மூளாய், டிசெ. 12

யாழ் குடாநாட்டில் உள்ள அரச காணிகளின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகள் யாழ். செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலக ரீதியாக கடமையாற்றும் குடியேற்ற உத்தியோகத்தர்களினால் இவ்விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

(ம-99)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம்மாதம் 11 ஆம் திகதி வரை பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்:—

### சங்கானை

(172842ஏ), (172996ஏ),
(172996பி), (172996சி),
(172996டி),

### சாவகச்சேரி

(150893ஏ), (150893பி),

### யாழ்ப்பாணம்

(152648ஏ), (161320ஏ),
(161320பி), (161320சி),
(161320டி), (166423ஏ),
(166423பி), (168535ஏ),
(168535பி), (168556ஏ),
(168556பி), (168556சி),
(168556டி), (168556ஈ),
(168571ஏ), (168576ஏ),
(168684ஏ), (168684பி),
(168825ஏ), (168825பி),
(168825சி), (168825டி),
(168913ஏ), (171695ஏ),
(171695பி), (171755ஏ),
(171857ஏ), (171871ஏ),
(171871பி), (171881ஏ),
(171881பி), (171881சி),
(171911ஏ), (171911பி),
(171911சி), (171915ஏ),
(171920ஏ), (171926ஏ),
(171932ஏ), (171942ஏ),
(171968ஏ), (171985ஏ),
(171988ஏ), (171988பி),
(171988சி), (172001ஏ),
(172001பி), (172003ஏ),
(172003பி), (172003சி),
(172042ஏ), (172042பி),
(172051ஏ), (172051பி),
(172051சி), (172051டி),
(172058ஏ), (172107ஏ),
(172134ஏ), (172134பி),
(172134சி), (172136ஏ),
(173378ஏ), (173414ஏ),
(173414பி), (173446ஏ),
(173459ஏ), (173466பி),
(173468ஏ). (173468பி),
(173490ஏ), (173561ஏ),
(173561பி), (173561சி),
(173595ஏ), (173595பி),
(173595சி), (173629ஏ),
(173631ஏ), (173721ஏ),
(173744ஏ), (173753ஏ),
(173805ஏ), (173805பி),
(173806ஏ), (173832ஏ),
(173832பி), (173834ஏ),
(173840ஏ), (173840பி),
(173840சி), (173859ஏ),
(173859பி), (173868ஏ),
(173868பி), (175274ஏ),
(175275ஏ), (175282ஏ),
(175282பி), (175312ஏ),
(175349ஏ), (175358ஏ),
(175359ஏ), (175377ஏ),
(175389ஏ), (178881டி),

### கரவெட்டி

(168634எ), (168634பி),

### கோப்பாய்

144993ஏ), (144993பி),
(159620ஏ), (162629ஏ),
(162629பி), (166916ஏ),
(166946பி), (166957ஏ),
(176957பி), (166975ஏ),
(166975பி), (166975சி),
(166975டி) (166975ஈ),
(166989ஏ), (166989பி)
(167090ஏ), (167090பி),
(167090சி), (167695ஏ),
(168216ஏ), (168217ஏ),
(168217பி), (168262ஏ),
(168271ஏ), [168271பி],
[168316ஏ], [168316பி],
[168316சி], [168316டி],
[168316ஈ], [166321ஏ],
[168334ஏ], [168334பி],
[170446ஏ], [170461ஏ],
[170461பி], [170468ஏ],
[170468பி], [170468சி],
[170468டி], [170518ஏ],
[170553ஏ], [170620ஏ],
[170632ஏ], [170634ஏ],
[173320ஏ], [173361ஏ],
[173361பி], [173361சி],
[173919ஏ], [173920ஏ],
[173969ஏ], [173969பி],
[173969சி], [173971ஏ],
[173978ஏ], [173978பி],
[173979ஏ], ]173979பி],
[173980ஏ], [173980பி],
[173987ஏ], [173993ஏ],
(173993பி), (174012ஏ),
(174060ஏ), (174079ஏ),
(174101ஏ), (174101பி),
(174101சி), (174101டி),
174101ஈ), (174195ஏ),
(174201ஏ), (174201பி),
174201சி), (174201டி),
(174202ஏ), (168467ஏ),

### நல்லூர்

(144990ஏ), (144990பி),
(145382ஏ), (145552ஏ),
(156965ஏ), (157159ஏ),
(157564ஏ), (157564பி),
(157564சி), (157578ஏ),
(157578பி) (167652ஏ),
(167652பி), (167652சி),
(167744ஏ),
(167744பி), (167744சி),
(167744டி), (167745ஏ),
(167782ஏ), (167782பி),
(16778-சி), (167786ஏ),
(167786பி), (170649ஏ),
(170653ஏ), (170910ஏ),
(171541ஏ), (171543ஏ),
(171548ஏ), (171618ஏ),
(171619ஏ), (174043ஏ),
(174044ஏ), (174048ஏ),
(174105ஏ), (174105பி),
(174105சி), (174110ஏ),
(174110பி), (174131ஏ)
(174133ஏ), (174133பி),
(174139ஏ), (174145ஏ),
(174145பி), (174145சி),
(174146ஏ), (174147ஏ),
(174162ஏ), (174162பி),
(174163ஏ), (174163பி),
(174163சி), (174182ஏ),
(144565ஏ), (144565பி),
(144565சி), (163397ஏ),
(166025ஏ), (166025பி),
(166293ஏ), (171856ஏ),
(171856பி), (171856சி),
(171856டி), (171833ஏ),
(173452ஏ), (173452பி),
(173499ஏ), (173499பி),
(173499சி), (173839ஏ),
(173839பி), (173839சி),
(173839டி), (173851ஏ),
(173851பி), (173851சி),
(673546ஏ),

### சண்டிலிப்பாய்

(173041 ஏ), (173041 பி),
(173041 சி), (173089 ஏ),
(175122 ஏ),

### தெல்லிப்பழை

172855 ஏ), (172855 பி).

### உடுவில்

(162780 ஏ), (162780 பி),
(162876 ஏ), (162876பி),
(162876 சி), (167636 ஏ),
(167636 பி), (167636 சி),
(167707 ஏ), (173916 ஏ),
(173921 ஏ), (173921 பி),
(173952 ஏ), (173953 ஏ),
(173953 பி), (173953 சி),
(173955 ஏ), (173955 பி),
(173955 சி), (174013 ஏ),
(174046 ஏ), (174071 ஏ),
(174071 பி), (174118 ஏ),
(165532 ஏ), (165532 பி),
(165532 சி), (165532 டி),
(166683 ஏ), (166683 பி),
(172824 ஏ), (172824 பி),
(172824 சி), (172844 ஏ),
(172903 ஏ), (173016 ஏ)

(ம-10)

# ஒளிவிழா

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக நலன் புரிச்சங்கத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் ஒளிவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணி முதல் மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ம-99)

# மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பா மாணவருக்கு

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்ற 9 ஆம் தர மாணவர்கள் தமது கணிப்பீட்டு அறிக்கையுடன் ஆண்டிறுதி மாவட்ட மட்டத்திலான பரீட்சைப் புள்ளிகளை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சி வலயத்திலோ அல்லது மருதனார்மடம் கல்வி வலயத்திலோ நாளை புதன்கிழமைக்கு முன்பு ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை தத்தமது கையொப்பத்தை இடுவதற்குத் தென்மராட்சி வலயத்துக்கு வருகை தரும்படியும் இவர்கள் கோரப்பட்டுள்ளனர். (இ.க)

# அகதி வாழ்வில் ஒரு வருடம் கழிகிறது தென்மராட்சி தெற்கு மக்களுக்கு!

1999 டிசெம்பர் 12 ஆம் திகதி. இந்நாள் தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டி வாழ் மக்களின் வாழ்வில் ஏற்பட்ட ஒரு பயங்கர துக்ககரமான நாள்.

இன்று 12 ஆம் திகதியுடன் ஒரு வருடத்தை அஞ்ஞாதவாசத்திலும் அகதிவாழ்விலும் இம்மக்கள் பூர்த்தி செய்கின்றனர். இடைவிடாத 'வானொலி' அறிவிப்பையும் பொருட்படுத்தாது இருந்த மக்கள், அங்கு விழுந்த ஷெல்களினால் இறந்தவர்கள் காயப்பட்டவர்களுடன் முதல் முதலில் அகதிவாழ்வை ஆரம்பிக்கப் புறப்பட்ட நாள் இன்றைய நாள் ஆகும்.

சுமார் ஆயிரத்து ஐந்நூறு குடும்பங்களைக் கொண்ட, ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளையுடைய விவசாய நிலப்பிரதேசம் தென்மராட்சி தெற்கு.

சாவகச்சேரி நகருக்கு தெற்கே ஆரம்பித்து, கேரதீவு, பூநகரி எல்லைக் குடாக்கடல் வரையான பிரதே

மக்கள் அரங்கம்

சத்தில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நெல்வயல் நிலமும், அதிக உற்பத்தியைக் கொண்ட தென்னம் தோட்டங்களும், பனந்தோப்பும் உடைய பிரதேசம் அது.

கோவிலாக்கண்டி கடலில் பிடிக்கப்படும் மீன்கள் சாவகச்சேரித் தொகுதிப் பிரதேச மக்களின் மீன் தேவையைப் பூர்த்தி செய்தது. தென்மராட்சி தெற்கு வயல்களிலே உற்பத்தி செய்யப்படும் நெல் யாழ்.குடாநாட்டின் அரையாண்டுத் தேவைக்குப் போதுமானது என ஒரு காலத்திலே கணக்கிடப்பட்டிருந்தது.

இப்பிரதேசத்திலே வாழும் மக்களில் எண்பது சதவீதத்தினர் அந்தப் பிரதேசத்திலேயே வாழ்ந்து பழக்கப்பட்டுப் போன விவசாயமும், மீன்பிடித்தொழிலுமே அவர்களின் பிரதான தொழிலாக மிளிர்ந்தது.

**மனம் உடைந்த நிலையில்**

இந்த மக்கள் இன்று, இருவருட காலபோக நெல் உற்பத்தியை இழந்து, அகதிகளாகி, வடமராட்சி

## அவல நிலைக்கு முடிவு வராதா?

யிலும், வலிகாமத்திலும் மனம் உடைந்த நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில், "எப்போது எங்கள் சொந்த ஊருக்குப் போவோம்?" என்ற ஏக்கத்தில் இவர்கள் உள்ளனர். பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து, அதனை அறுவடை செய்ய முடியாது ஓடி வந்த குடும்பங்கள் பல. இவ்வருட நெல் உற்பத்தியைச் செய்யலாம் என நம்பி ஏமாந்தவர்கள் பலர். தங்கள் உடைமைகளை, உறவுகளைப் பிரிந்து ஒண்டிகளாய் வாழ்வோர் பலர். சாவகச்சேரி நகரத்திலே தஞ்சமடைந்து, கடந்த மேமாதம் இருபதாம் திகதி அங்கிருந்து அப்பகுதி மக்களும் வெறுங்கையுடன் ஓடி வந்த பொழுது சேர்ந்து வந்து அகதிகளானோர் பலர். தென்மராட்சி தெற்கிலிருந்து அகதியானோர் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்யும் இந்த நாள், ஏனைய பகுதிகளான, பச்சிலைப்பள்ளி, சாவகச்சேரி தொகுதி சரசாலை, மட்டுவில், வரணி உள்ளிட்ட பகுதி மக்கள் இடம்பெயர்ந்து ஆறு மாதங்கள் பூர்த்தியாகும் இந்நிலையில் எம் நிலை என்ன? இந்நிலை தொடர்வதா? எனக் கவலையுடன் ஏங்குகிறார்கள் இம் மக்கள்.

**கல்வியும் பாழ்**

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள தேசியப் பாடசாலையான இந்துக் கல்லூரி மற்றும் டிறிபேக் கல்லூரி உள்ளிட்ட பாடசாலைகளில் இம்முறை ஜி.சீ.ஈ.உயர் தரப் பரீட்சை முடிவுகள் வீழ்ச்சி கண்டுள்ளன. கடந்தவருடம் வரை பல்கலைக்கழகத்துக்குப் பல மாணவர்கள் தெரிவான போதிலும், இம்முறை இருவர் மட்டுமே தெரிவானதாகத் தெரிகிறது.

மாணிக்க
லீலாவிநோதன்

மாணவர்கள் இடம்பெயர்ந்து அல்லலுற்ற காரணத்தினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையும் மாணவர்களுக்கு கவலையுடன் தோற்றும் பலப் பரீட்சையாகவே உள்ளது. விகிதாசாரம், வெட்டுப்புள்ளி யாவும் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் உயர்வாகவே கணிக்கப்படுவதும் இடம்பெயர் மாணவர்களுக்கு ஒரு சோதனையாகவே அமையும். இந்நிலை மாறி நிம்மதியுடன் நம்மக்கள் வாழ நல்லதொரு நிலை உருவாக இறைவனைப் பிரார்த்திப்போம். ★




யாழ். வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்தின் "*சரணம் காமாக்ஷி*" ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. யாழ். மாநகரசபை ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் இதனைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். பண்ணிசைப் புலவர் நா.வி.மு. நவரத்தினமும் தேவஸ்தானத் தலைவர் இ.வே.கந்தசாமியும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: றெக்ஸ் தேவன்)*



ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் புதிதாகக் கட்டப்பட்ட உடுவில் மத்திய மருந்தகத்தை வலிகாமம் தெற்கு பிரதேசச் செயலர் ஆ.மகாலிங்கம் அண்மையில் திறந்து வைத்தார். அவர் குத்துவிளக்கேற்றுவதனை படத்தில் காணலாம்.

## ஈச்சமோட்டை, பாண்டியந்தாழ்வு பகுதிகள் வழமைக்கு திரும்புகின்றன

அரியாலை,டிசெ.12

ஈச்சமோட்டை, பாண்டியந்தாழ்வு பகுதிகள் படிப்படியாக வழமை நிலைக்குத் திரும்பி வருகின்றன.

எனினும் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் இந்தப் பகுதியில் முழுமையாக மீளக்குடியமர்வதற்கு பின்னடித்து வருகின்றனர்.

பாஷையூர், கொழும்புத்துறை, வளன்புரம் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமரும் பட்சத்தில் இந்தப் பகுதிகளும் வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிகமான மக்கள் தமது வீடுகளில் பகல் நேரங்களில் தங்கிவிட்டு இரவு நேரங்களில் வேறு இடங்களுக்குச் சென்று விடுகின்றனர்.

பகல் வேளைகளில் இந்தப் பகுதிகளில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களை தடுக்கும் நோக்குடனேயே மக்கள் தமது வீடுகளில் தங்கி வருகின்றனர்.

அதே சமயம் கொய்யாத்தோட்டம் பகுதி, மக்கள் எவரும் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

கரையோரத்தை அண்டிய பகுதியாகையால் இந்த பகுதியில் மக்கள் மீளக்குடியமருவதைத் தவிர்த்து வருகின்றனர். (ம-17)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஊர்காவற்றுறைக்கு 12 லட்சம் ஒதுக்கீடு

காரைநகர்,டிசெ.12

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து இந்த ஆண்டுக்கு 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் இருந்து பல திட்டங்கள் இவ்வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

குறிக்கப்பட்ட திட்டங்களும் ஒதுக்கப்பட்ட நிதி விவரமும் வருமாறு:-

☆ நாரந்தனை கணேசா வித்தியாலய திருத்தம் - 2 இலட்சம் ரூபா.

☆ சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலய கட்டட புனரமைப்பு - 2 இலட்சம் ரூபா.

☆ மெரிஞ்சிமுனை றோ.த.க. பாடசாலை மலசலகூடம் அமைத்தல் - 2 இலட்சம் ரூபா.


☆ ஊர்காவற்றுறை சண்முகானந்தா வித்தியாலயத்திற்கு மின் பிறப்பாக்கி வழங்கல் - 75 ஆயிரம் ரூபா.

☆ சென்.அந்தோனியார் கல்லூரிக்கு கணனி அறை அமைத்தல் - 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா.

☆ சென்.மேரிஸ் கல்லூரி வகுப்பறை அமைத்தல் - 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா.

☆ அனலைதீவு ஐயனார் ஆலயம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.

☆ ஊர்காவற்றுறை தேவன்கனைப் பிள்ளையார் கோயில் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா (ம-73)



வல்வெட்டித்துறை திருவில் அகதி முகாமில் உள்ள அகதிகளுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் சமீபத்தில் படுக்கை விரிப்புக்கள் வழங்கப்பட்டன. பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி படுக்கை விரிப்புக்களைக் கையளித்த போது எடுக்கப்பட்ட படம். படத்தில் சுவாமி சித்ருபானந்தாவும் காணப்படுகின்றார்.

### கலந்துரையாடல்

மானிப்பாய்,டிசெ.12

உடுவில்கமநல கேந்திர நிலைய விவசாய சம்மேளனங்கள் எதிர்நோக்கும் விவசாய காணிவரி, சந்தைவரி, பிரதேச அபிவிருத்தி போன்ற முக்கிய விடயங்கள் பற்றி யாழ்.ஸ்ரீதர் தியேட்டர் கேட்போர் கூடத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் ஆராயப்பட உள்ளது.

நாளை மறுதினம் வியாழன் காலை 10.00 மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலில் உதவி ஆணையாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

சம்பந்தப்பட்ட விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (இ-90)

### கோயிலில் திருட்டு

அரியாலை,டிசெ.12

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் வைரவர் ஆலயத்தின் மூலஸ்தான விக்கிரகத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்த இயந்திரத்தகடு திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு சம்பவம் மக்கள் இடம்பெயர்ந்து சென்ற சமயம் இடம்பெற்றிருப்பதாக கூறப்படுகின்றது.

இதேசமயம் இந்தப் பகுதியில் மக்கள் ஓரளவு மீளக் குடியமர்ந்து வருவதை அடுத்து மேற்படி ஆலயத்தை திறந்து பூஜை வழிபாடுகள் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை ஆலய நிர்வாக சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-17)

## கோப்பாயில் கார்த்திகை தீப திருவிழாவிற்கு மட்டும் மணி அடிக்க அனுமதி

கோப்பாய்,டிசெ.12

கோப்பாய்ப் பகுதியில் உள்ள இந்து ஆலயங்களில் கார்த்திகைத் தீபத் திருவிழாவை முன்னிட்டு கடந்த 9ஆம், 10ஆம் திகதிகளில் மட்டும் கண்டாமணிகளை அடிப்பதற்கு படையினர் அனுமதி வழங்கினர்.

ஆலய நிர்வாகத்தினர் அதிகாரிகளிடம் கோரியதை அடுத்து கார்த்திகைத் திருவிழாக் காலங்களில் மணிஅடிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-72)

### இலவச பாடநூல்கள்

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந் நூல்கள் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு வருவதாக மேலதிக மாகாண கல்விப் பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(இ-10)

## வலி. தென்மேற்கு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு,டிசெ.12

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்பட உள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்றுமுதல் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு மானிப்பாய் பட்டின நூலகத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறும்.

இன்று நடைபெறும் கலந்துரையாடலில் பிரதேசசபைக்கு உட்பட்ட விவசாய சம்மேளனங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் -

நாளைய கலந்துரையாடலில் பிரதேசசபைக்கு உட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளும் -

நாளைமறுதினம் இடம்பெறும் கலந்துரையாடலில் அனைத்து வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளும்- கலந்து கொள்வார்கள் என பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தெரிவித்தார்.(ம-185)

## முதலியார் குளம் திறப்புவிழா

சண்டிலிப்பாய்,டிசெ.12

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு நவாலி - சங்கரத்தைப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு "முதலியார் குளம்" என்ற பெயரிடப்பட்ட குளத்தின் திறப்புவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியார் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம அதிதியாக திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்கள பிரதிப்பணிப்பாளர் பொறியியலாளர் எஸ். செல்வரத்தினம் கலந்துகொண்டு புதிய குளத்தைத் திறந்து வைப்பார்.

இந்த விழாவில் கௌரவ விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை, யாழ். கமநலச் சேவைகள் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.(இ-135)

### பனிப்புலத்தில் திருட்டு

பனிப்புலம் கிராமத்திலுள்ள வீடு ஒன்றில் நள்ளிரவு வேளையில் சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றும், சைக்கிள் ஒன்றும் கடந்தவாரம் திருட்டுப் போயுள்ளன. வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த நித்திரையில் இருந்த போது இந்தத் திருட்டு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து வீட்டு உரிமையாளர் இளவாலைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (இ-135)

# துயர்பகிர்வும் அஞ்சலியும்

வட்டு.மத்திய கல்லூரியின்
(வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாசாலை)
முன்னாள் அதிபரும் சைவப் பெரியாருமான
அமரர் க.சுப்பிரமணியம் (மணிய வாத்தியர்)
**அவர்களின் அன்புப் பாரியார்**
**திருமதி மங்கையர்க்கரசி சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய ஆசிரியை, வட்டு. இந்துக் கல்லூரி)

அவர்கள் காலமான செய்தியால் துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைஞ்சுகின்றோம்

ஓம் சாந்தி!

*வட்டுக்கோட்டை.*

**வட்டு.மத்திய கல்லூரிச் சமூகமும்,**
**வட்டு.இந்து வாலிபர் சங்கமும்.**

(81560)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 1911 - 06 - 10



ஆண்டவன் அடியில் 2000 - 11 - 13

அமரர்
## வேலுப்பிள்ளை இராசையா

எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும்
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் அன்பை என்றென்றும் மறக்கமாட்டோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியையும், வீட்டுக்கிரியையும் *நாளை (13.12.2000) புதன்கிழமை* அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரும் சமுகம் தந்து இல்லத்தில் நிகழும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு வேண்டுகின்றோம்.

*சில்லாலை மேற்கு,*
*விநாயகர் வீதி,*
*சாந்தை, பண்டத்தரிப்பு.*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(80858)

## சமுர்த்தி ஊக்குவிப்பாளருக்கு நிரந்தர நியமனம்

வலி.தென்மேற்கு.டிசெ.12

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி ஊக்குவிப்பாளராக கடமையாற்றிய 25 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்களை மானிப்பாய்த் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கடந்த வியாழனன்று வழங்கினார்.

(ம-185)

## வீதி மீண்டும் மக்கள் பாவனைக்கு!

யாழ்ப்பாணம்.டிசெ.12

புன்னாலைக்கட்டுவன்-மல்லாகம் வீதியையும், மயிலங்காடு-ஏழாலை வடக்கு உபதபாற்கந்தோர் வீதியையும் இணைக்கும் ஏழாலை கத்தோலிக்க சேமக் காலைக்கு அருகில் உள்ள வீதி மீண்டும் மக்கள் பாவனைக்கு திறக்கப்பட உள்ளது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மக்கள் போக்குவரத்து இன்றியிருந்த இந்த வீதி, ஏழாலை தெற்கு கிராம அலுவலர் பொ. ஜெயகரன், ஏழாலை புனித இசிதோர ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்திரு அ.ஞானப்பிரகாசம் மற்றும் ஏழாலை விவசாய சம்மேளனத் தலைவர் க.யோகராசா ஆகியோரின் முயற்சியினால் மீண்டும் மக்கள் போக்குவரத்துக்கு விடப்பட உள்ளது. (ம-10)

## முகாமைத்துவ, வணிகபீட பரீட்சைகள்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள், வணிகபீட 1ஆம், 2 ஆம வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் அனைத்தும் திட்டமிட்டபடி இன்று நடைபெறும் என்று முகாமைத்துவ கற்கைகள், வணிகபீட மாணவர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது. இந்தப் பரீட்சைகளுக்கு அனைத்து மாணவர்களையும் தவறாது தோற்றுமாறு ஒன்றியத்தின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ம-6)

## திருட்டு முயற்சி தோல்வி

துன்னாலை, அல்லையம்பதியில் இயங்கிவரும் சாவகச்சேரி பல நோ. கூ.ச. கிளையில் நள்ளிரவு வேளையில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி அயலவர்களின் கூச்சலினால் தோல்வியில் முடிந்தது. திருடர் கோஷ்டி ஓடித் தலைமறைவானது.இந்தச் சம்பவம் கடந்த வெள்ளி நள்ளிரவு 1.30 மணியளவில் இடம்பெற்றது.

முதல் நாள் இரவு இப்பகுதியில் ஒரு தையல் கடை உடைக்கப்பட்டு, 3 தையல் மெஷின்கள் களவாடப்பட்டிருந்தன. இதனால் அப்பகுதி மக்கள் அவதானமாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-109)

# நீங்காத நினைவுகள்

11 ஆம் ஆண்டு



அமரர்
**க.பாலசுப்பிரமணியம்** (ஆசிரியர்)
(சோதிடர்)

மலர்வு 28-09-1926 உதிர்வு 29-09-1989

முதலாம் ஆண்டு



திருமதி
**பாலேந்திரன் சசிகலா**
(பாப்பா)

மலர்வு 23-03-1954 உதிர்வு 26-11-1999

அன்புக்கினிய அகத்தீரே! அயலார் மெச்ச வாழ்ந்தீரே!!
துன்பந் தோன்றா முகத்தீரே! துணையாய் நாளும் இருந்தீரே!!
இன்பமெமக்குத் தந்தீரே! இந்நாளெங்கு சென்றீரோ?
சின்னஞ் சிறுவர் நாமிங்கே செய்வதொன்றும் அறியோமே.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவன் அருள் புரிவார்.

*சிறுவிளான்,*
*இளவாலை.*

- குடும்பத்தினர்.

(81485)

## Tender Notice
UNIVERSITY OF JAFFNA

Sealed Tenders are invited for the supply of the following items from the reputed suppliers:

| Item | Quantity |
|---|---|
| 1. Computers | 69 Nos. |
| 2. Printers | 47 Nos. |
| 3. Monitors | 28 Nos. |
| 4. Data Switch | 21 Nos. |
| 5. Note Book PC | 02 Nos. |
| 6. Stabilizer | 45 Nos. |
| 7. UPS | 72 Nos. |
| 8. Computer Scanner | 06 Nos. |

Tender documents including the specification of the items could be obtained from the following addresses:

**1. Bursar's Office, Thirunelvely, Jaffna. T.P.No.021-2644**

**2. University office in Colombo, EG4 Central Road, Colombo - 12. T.P.No. 435620**

Documents could be obtained during office hours from 15th to 22nd December, 2000 by making a non refundable tender fee of Rs.500/- by money order drawn in favour of the University of Jaffna payable at the Jaffna Post Office. The University reserves the right to increse /reduce the quantity to be purchased and any special discount allowed to the University should be indicated.

The Tenders should be sent under the registered cover or by hand to one of the above addresses on or before 2.00p.m. on 29th December, 2000 with the mark 'Tender for Computers' on the top left hand corner of the envelope.

**Registrar,**
***University of Jaffna***

(C/14218)

## Tender Notice
UNIVERSITY OF JAFFNA

Sealed Tenders are invited for the supply of the following items from the reputed suppliers:

| Item | Quantity |
|---|---|
| 01. Over head Projector | 19Nos. |
| 02. Slide Projector | 06Nos. |
| 03. Pin Board | 02Nos. |
| 04. Flip Chart Board | 02Nos. |
| 05. Magi Board | 35Nos. |
| 06. Revolving Chairs | 65Nos. |
| 07. Computer table | 15Nos. |
| 08. Multi Media Projector | 01No. |
| 09. Camera | 03Nos. |
| 10. Vacuum Floor Polisher | 02Nos. |
| 11. Stencil Scanner | 02Nos. |
| 12. Paper Cutter | 04Nos. |
| 13. Video Camera | 01No. |
| 14. Video Projector | 01No. |
| 15. CD Player | 01No. |
| 16. Tripods for Camera | 01No. |
| 17. Epidiascope | 04Nos. |

Tender documents including the Specification of the items could be obtained from the following addresses:

**1. Bursar's Office, Thirunelvely, Jaffna. T.P.No.021 - 2644**

**2. University Office in Colombo, EG4 Central Road, Colombo - 12. T.P.No. 435620**

Documents could be obtained during office hours from 15th to 22nd December, 2000 by Making a non refundable Tender Fee of Rs.500/- by money order drawn in favour of the University of Jaffna payable at the Jaffna Post Office. The University reserves the right to increase / reduce the Quantity to be purchased and any special discount allowed to the University should be indicated.

The Tenders should be sent under the registered cover or by hand to one of the above addresses on or before2.00p.m. on 29th December, 2000 with the mark 'Tender for office and teaching Equipment' on the top left hand corner of the envelope.

**Registrar,**
***University of Jaffna.***

(C/14219)

# யாழ். மாநகரசபைக் கட்டடத்தை பழைய இடத்தில் நிறுவும் பிரேரணை

## புளொட் உறுப்பினர்கள் முன்னறிவித்தல்

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ். மாநகர சபையின் பழைய இடத்தில் மீண்டும் யாழ். மாநகர சபைக் கட்டடத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்றுக்கு மாநகரசபையின் புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் விவாதிப்பதற்காகவே இந்தப் பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

முன்னறிவித்தல் கொடுத்துள்ள ஏனைய பிரேரணைகள் வருமாறு:-

☆ யாழ். திறந்தவெளியரங்கைப் புனரமைத்தல்.

☆ யாழ்.சுப்பிரமணியம் பூங்காவைப் புனரமைத்தல்.

☆ பரவக்குளம் தொடக்கம் கடல் ஏரி வரையான பாரிய வாய்க்காலைத் திருத்துதல்.

☆ குருநகரில் கடலட்டை மற்றும் கருவாடு ஆகியவற்றைப் பதனிட குடிமனை அற்ற பகுதிகளில் இடம் ஒதுக்கிக் கொடுத்தல்.

☆ வர்த்தக நிலையங்கள், சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள், சந்தைகள் ஆகியவற்றை சபையின் சட்ட திட்டங்களுக்கு அமையச் செயற்படுத்துதல்.

☆ நகரம் சுகாதாரத்துடனும் அழகுடனும் திகழ நடவடிக்கை எடுத்தல்.

☆ நிறுவப்பட்டுள்ள சிலைகளைப் பராமரித்தல்.

☆ நடைபாதை வியாபாரிகளின் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

☆ யாழ்.மாநகர சபையின் சிற்றூழியர் சங்கம் எதிர்நோக்கும் வேலை நேரம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல். (இ-10-3)

## மனித உரிமைகள் தினம்

# வடக்கு, கிழக்கு பகுதிகளில் பல கண்டனப் பேரணிகள்!

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றுமுன்தினம் வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

ஊர்வலத்தின் இறுதியில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு, தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது.

இதேவேளை திருகோணமலை நகரில் எட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து மனித உரிமை மீறலுக்கு எதிராகக் கண்டனப் பேரணியினை நடத்தின.

மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற அமைதிப் பேரணியில் "ஒவ்வொரு மனிதனின் உரிமைகளையும் சகல மனிதர்களும் மதிக்கவேண்டும்"என்ற கோஷம் எழுப்பப்பட்டது.

மலையக மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதஉரிமை மீறல்களைக் கண்டித்து பெருந்தோட்ட பொது அமைப்புகளின ஒன்றியம் ஹற்றன் நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டத்தையும் நடத்தியது. (உ-5)

# விடுதலைப் புலிகள் நேசக்கரம் நீட்டியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள்!

## யாழ்- ஆயரின் கோரிக்கை இது

கொழும்பு,டிசெ.12

"விடுதலைப் புலிகள் பேச்சுக்குத் தயார் என நேசக்கரம் நீட்டியுள்ளனர். எனவே இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்று தெற்குத் தலைவர்களைக் கேட்டுள்ளேன்"

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். ஆயர் அதிமேதகு. தோமஸ் சௌந்தரநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தெற்கு துறைமுக அபிவிருத்தி அமைச்சர் றொனி டிமெல் ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்கான சூழலை ஏற்படுத்துமாறு கோரியுள்ளேன். பேச்சுக்களைக் குழப்ப இடமளிக்க வேண்டாம் என்றும் கேட்டுள்ளேன் - என்றும் ஆயர் மேலும் சொன்னார். (உ-3)

# தமிழ் உச்சரிப்புகளை சீராக்க விமான நிலையத்தில் நடவடிக்கை

கொழும்பு,டிசெ.12

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பயணிகளுக்காக ஒலிபரப்பாகும் தமிழ்மொழி மூல அறிவிப்புகளில் உள்ள உச்சரிப்புக் குறைபாடுகள் மற்றும் சீர்கேடுகளைக் களைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா விமானப் பயணத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டு வந்ததை அடுத்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பு விடுத்த பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விமான நிலையத்தில் ஒலிபரப்பாகும் தமிழ்மொழி அறிவிப்புகள் பெரும்பாலும் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் மொழி உச்சரிப்புக்களில் குறைபாடுகளும், சீர்கேடுகளும் காணப்படுகின்றன.

இந்தக் குறைபாட்டை விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து தமிழ்மொழி மூல அறிவிப்புகளை ஒலிபரப்புவதற்கான அறிவிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு அந்த பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் இந்து கலாசாரத் துறை

மட்டக்களப்பு,டிசெ.12

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் கலைப்பீடத்தில் இந்து கலாசாரத் துறை என்ற புதிய துறை அடுத்தவருடம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தத் துறைக்கு தற்காலிக உதவி விரிவுரையாளர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தப் பல்கலைக்கழகத்தில் இரசாயனத் துறைக்கு தற்காலிகமாக உதவி விரிவுரையாளர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இரசாயனவியலில் வகுப்பு 2 இல் தரம் ஒன்று உயர்தரச் சித்தி பெற்றவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம்

அரியாலை,டிசெ.12

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான அடுத்த கட்ட நிவாரண விநியோகம் இந்த வாரப் பகுதியில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.(ம-17)

# வவுனியாவில் புனர்வாழ்வு முகாம்

வவுனியா,டிசெ.12

வடக்கு - கிழக்கில் கைது செய்யப்படும் இளைஞர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கான முகாம் ஒன்று வவுனியாவில் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது.

பண்டாரவளை விந்துனுவெவவில் அமைந்திருந்த முகாமில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்தே வவுனியாவில் முகாம் அமைக்க முடிவாகியுள்ளது.

இந்த முகாம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக இடத்தைத் தெரிவு செய்வதற்காக அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் வவுனியா வந்திருந்தது.

இந்த முகாம் அமைக்கப்பட்ட பின்னர், விந்துனுவெவ முகாம் தாக்குதலில் காயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் 21 தமிழ் இளைஞர்கள் இங்கு இடம் மாற்றப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3-164)


## நெஞ்சை விட்டகலா நினைவில் ஓராண்டு

மலர்வு 23 - 06 - 1956



மறைவு 12 - 12 - 1999

அமரர் பொன்னம்பலம் தர்மகுலசேகரம்

திதி: சதுர்த்தி

உதித்த சூரியன் மறைந்துவிடும்
மலர்ந்த பூ உதிர்ந்துவிடும் - மண்ணில்
பிறந்த நீ மறைந்துவிட்டாய்!
எம்மை மறந்துவிட்டாய்!
அலையும் நெஞ்சின் அடிநாதம்
உயிர் உள்ள வரை உன்னைத்தேடும்
உன் பெயர் சொல்லி நம் சிறுவர்
உலகில் உயர உன்பதம் போற்றி!
நாளும் துதித்து நலம்பல அடைய
இறையாய் இருந்து நல்வழி காட்டு!

மனைவி:
திருச்செல்வி தர்மகுலசேகரம்
பிள்ளைகள்:
சாரங்கன், துஷ்யந்தன்.

*மாவடிச் சந்தி,*
*வட்டுக்கோட்டை.* (C/14198)



## நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 10 - 04 - 1924



ஆண்டவன் அடியில் 12 - 11 - 2000

அமரர்

கந்தர் பொன்னுத்துரை (பண்டா)

12-11-2000 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் மற்றும் நோயுற்ற காலத்தில் பலவழிகளில் உதவிபுரிந்த வைத்தியர், தாதிகள் மற்றும் இறுதிஊர்வலத்தில் கலந்துகொண்ட யாவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (12-12-2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கலைவாணி வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.* (81465)



## யாழ். குடாநாட்டில்......

வண்ணப்படங்களை அச்சிட்டு வரும் பிள்ளையார் அச்சகத்தாரின் புதுவருட வெளியீடு!

✪ உங்கள் விளம்பரங்களுடன் கூடிய பல வர்ணப் படங்களுடனான பொக்கட் கலண்டர்கள்

✪ பாடசாலை நேர சூசிகள்

என்பவற்றை அதி நவீன கணனி மூலம் ஒவ்செற்றில் அச்சடிக்க அல்லது ஸ்கிறீனில் அச்சடிக்க நாடவேண்டிய இடம்:-

## பிள்ளையார் அச்சகம்

**PILLAIYAR OFF SET PRINTERS**

*676, POINTPEDRO ROAD,*
*NALLUR,*
*JAFFNA.*

(81419)

*676, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனை

குறுகிய காலத்தில் காய்க்கக் கூடிய தென்னங்கன்றுகள் விற்ப னைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- S.M. சுப்பிரமணியம் (பீற்றூட் மணியம்), நிதியம்பனை, மல்லாகம். (C/14215)

PENTIUM III கணனி, YEN-MAR மின் பிறப்பாக்கி, அலுவலகக் கதிரைகள், கணனிப்புத்தகங்கள விற் பனைக்கு உண்டு. தொடர்பு:-சி. செந்தூரன், "சத்திய கிரி" இணுவில் சிவகாமி அம்மன் கோயிலடி, இணு வில் கிழக்கு, இணுவில். (81555)

நல்ல நிலையிலுள்ள திண்டுக் கல் இரும்புப் பெட்டி 2 1/2 x 2' (அயன் சேவ்), அல்பாப் பெட்டி இத் துடன் இங்கிலீஸ் பெட்டியும் விற் பனைக்கு உண்டு. வெள்ளிக்கிழமை தவிர வார நாள்களில் பார்வையிட லாம். தொடர்பு:- S.K.பிள்ளை, 311, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல் லது சிவன் கோயில் வீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. (81550)

## தவறிவிட்டது

கச்சாய் தெற்கு, கொடிகாமம் என்னும் முகவரியை உடைய செல் லத்துரை சிவசோதி என்பவரது விசேட அ.அ. (இல.091002869) 09.12.2000 அன்று கொக்குவிலுக்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இராசம் கொமினிக்கேசன், ஆஸ்பத் திரி வீதி, யாழ்.என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (81537)

தாவளை இயற்றாலை வரணி யைச் சேர்ந்த தம்பையா கஜேந்தி ரன் என்பவரது அடையாள அட்டை கள் 02-12-2000 புத்தூருக்கும் வாதர வத்தைக்குமிடையில் தவறிவிட் டன. தே.அ.அ. இல.780483393V, வி.அ.அ. இல. 091037955. கண்டெ டுத்தவர்கள் தயவு செய்து ஆ.சதா சிவம் 2ஆம் குறுக்குத் தெரு, பருத் தித்துறை என்ற விலாசத்தில் ஒப்ப டைக்கவும். (C/14252)

## SPOKEN ENGLISH

சனி, ஞாயிறு கிழமைகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தொடர்பு:- ஆசிரியர் தேவா, 151,பிரம் படி லேன், கொக்குவில். (81558)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

நல்லூர் பகுதியில் ஒரு சிறு தொகைப்பணம் 10-12-2000 அன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவற விட்டவர்கள் நா.அருமைத்திருநாய கம், ரூபா பன்முகவர்த்தகம்,104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (81562)

## 20 அடி உயர விநாயகர் உருவச் சிலை பவனி

யாழ்ப்பாணம்,டிசெ.12

சித்தன்கேணி ஸ்ரீ சிவகாமி அம் பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை 20 அடி உயர முள்ள விநாயகர் சிலை வீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறும்.

விநாயகர் உருவச் சிலை ஆல யத்தில் இருந்து புறப்பட்டு சித்தன் கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம் சென்று அங்கிருந்து சிவா லய மூன்றாம் வீதியூடாக வழக்கம் பரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆல யம் சென்றடையும். பின்பு அதே வழியாக சிவாலயம் வந்தடையும். (ம)

## வீதி திருத்த போடப்பட்ட கற்கள் திருட்டு

காரைநகர்,டிசெ.12

காரைநகர் பாலாவோடை அம் மன் கோயில் வீதியை திருத்து வதற்காக வீதியோரத்தில் பறிக்கப் பட்ட கற்கள் நாளாந்தம் விசமிக ளால் திருடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் கற்கள் பறிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையில் இதுவரை வீதி திருத்தப்படாததால் விசமிகள் கற்களை அபகரித்துச் செல்கின்றனர். (ம-73)

## நிரந்தர நியமனம்

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி ஊக்கு விப்பாளர் களாக கடமை யாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள் ளது. இவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் இன்றுகாலை 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படும். (ம-178)

# சிறப்பு மலர் வெளியீடு

சண்டிலிப்பாய்,டிசெ.12

சங்கானை மேற்கு சைவப்பிர காச வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலையால் சிறப்பு மலர் ஒன்று எதிர்வரும் ஜன வரி மாதத்தில் வெளியிடப்பட உள் ளது. இவ்விழாவை முன்னிட்டு பொருட் காட்சியும், விளையாட்டுப் போட்டி களும் அண்மையில் நடைபெற்றுள் ளதாக வித்தியாலய அதிபர் வி.நட ராசா தெரிவித்தார். (ம-135)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"

ii தீமோத் தேயு : 4-7

மலர்வு 02 - 09 - 1930



உதிர்வு 13 - 11 - 2000

## அமரர் ஆறுமுகம் வைரமுத்து
(ஆபிரகாம்)

எமது அன்பின் குடும்பத் தலைவர் அமரர் ஆறுமுகம் வைரமுத்து (ஆபிரகாம், கச்சேரியடி ஜெபவீடு சபை மூப்பர்) அவர்களின் மறைவு கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் துயரில் பங்கு கொண்டவர்கட்கும், மரணச்சடங்கு வேளையிலும் சகல பங்களிப் பும் செய்து கலந்து கொண்ட போதகர்கள், ஊழியர்கள், சபை விசுவாசிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


அன்னாரின் 31ஆம் நாள் நன்றி நினைவு ஆராதனை 13. 12. 2000 புதன்கிழமை காலை 11மணியளவில் உரும்பிராயில் நடைபெறும். அவ்வாரதனையிலும் பின் நடைபெறும் மதியபோசனத்திலும் யாவ ரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி: **இராசம்மா,**
பிள்ளைகள்: **யசோதராதேவி** குடும்பம்
**சந்திரசேகரம்** குடும்பம் (பிரான்ஸ்)
**குணசேகரம்** குடும்பம் (பிரான்ஸ்)
**சந்திரகுமாரி** குடும்பம்
**உதயகுமார்** குடும்பம் (கொலண்ட்)
**பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்**

நி.முகவரி - *பாரதி வீதி,*
*நாயன்மார்கட்டு.*
தற்காலிக முகவரி :-
*பழைய ம.எ.எரிபொருள் நிலைய*
*முன் ஒழுங்கை,*
*உரும்பிராய்.*

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்.
(81574) வெளிப்படுத்தின விஷேசம் 14:13

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் தம்பிஐயா பாலசிங்கம்

பெற்றெடுத்த பிள்ளைகளுக்குப் பெருமை சேர்த்து
பிறநாட்டில், கொழும்பில் அவர்களைச் செழிக்க
வைத்து
இத்தரையில் இறுதிவரை நிமிர்ந்து எவர்க்கும்
இனியவராய் வாழ்ந்துயர்ந்து... நேற்றுத் தெய்வ
நற்கதியை அடைந்தீர்! ஊர்... கண்ணீர் மல்கச்
சொர்க்கத்தில் குடிபுகுந்தீர்! அன்பைத் தந்த
பெட்டகமே! 'பெறாமக்கள' நாமும் உங்கள்
ஆத்மாவின் சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

*50/23, செட்டித்தெரு,*
*நல்லூர்.* (C/14238)

**மருமக்கள்,**
**மைத்துனர்.**

# கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 26-07-1949

அரன் அடியில் 10-12-2000

ஐயனார்கோயிலடி, சுன்னாகம்

## அமரர் சிற்றம்பலம் கணேசநாதன்
(பணியாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

**நேற்று வரை எம்முடனே இணைந்து நின்றாய்!**
**இன்று காலையிலே வந்ததையா உன் மரணச்செய்தி**
**எம்மோடு கைகோர்த்து கூட்டுறவுக்கு அணி சேர்த்தாய்!**
**எம்மிதயம் துடிக்க கார்த்திகைத் தீபத்தில் சங்கமித்தாய்!**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, மக்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்,**
**பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்.**

*பல நோ.கூ.சங்கம்,*
*சுன்னாகம்.* (C/14255)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 - 05 - 1923



மறைவு 25 - 11 - 1996

## அமரர் சின்னப்பு தருமலிங்கம்

திதி 12-12-2000

எமது அன்புத் தெய்வமாய் வாழ்ந்து எங்கள்
உள்ளங்களில்
இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் தெய்வத்தை
நினைவு கூருகின்றோம்.

**மனைவி, மகன், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

*இணுவில் மேற்கு.* (81569)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி இரத்தினம் இராசரத்தினம்

தோற்றம்: 02-10-1928

மறைவு: 12-11-2000

அன்பின் திருவுருவாய் விளங்கிய எமது அன்னையே!
பாசத்தின் உறைவிடமே!
எம் உள்ளத்தின் அணையா அகல் விளக்கே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு நீங்காது.
*உங்கள் ஆத்மா சாந்தி பெற*
*இணுவில் பரராஜசேகரப்பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.*

இணுவில் தெற்கு,
இணுவில்.

**- குடும்பத்தினர்**
(81561)

# தவறிவிட்டது

10—12—2000 அன்று காங்கேசன் துறையை வந்தடைந்த கப்பலில் வெள்ளை நிறமுடைய உடுப்பு பார்சல் பாக் ஒன்று தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 73, சிற்றி ரெக்ஸ் அன் ரெயிலர்ஸ், யாழ்.நகர் எனும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சிற்றி ரெக்ஸ் ரெயிலர்ஸ்.

(சி/14257)

# முதலியார் குளம் திறப்பு விழா

இடம்:- நவாலி சங்கரத்தை பிரதான வீதி, முதலியார் குளத்திற்கு அருகில்

காலம்:- நாளை (13—12—2000) புதன்கிழமை [புதிய நேரம்] முற்பகல் 9 மணி

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைப்பவர்:-

ஏந்திரி. எஸ். செல்வரத்தினம்
(பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை)

பிரதம விருந்தினர்:- க. சண்முகநாதன்
(யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்)

சிறப்பு விருந்தினர்கள்:-

து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர்)

க. சுந்தரேசன்
(யாழ் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர்)

எஸ். சின்னத்துரை
(யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர்)

நா. வேதநாயகன்
(சண்டிலிப்பாய் பிரதேச செயலர்)

நிகழ்ச்சிகள்:- இறைவணக்கம், தலைவர் உரை, சிறப்பு விருந்தினர்கள் உரை, நன்றி உரை.

விவசாயிகள் மற்றும் விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்கள் தவறாது விழாவுக்கு சமுகம் தரும்படி வேண்டுகின்றோம்.

சி.பொ.வ.மா.க. முதலியார்
தலைவர்
மானிப்பாய் மேற்கு
விவசாய சம்மேளனம்

கட்டுடை, மானிப்பாய். (81572)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 — 09 — 1925

மறைவு 15 — 12 — 1998

## திருமதி கணபதிப்பிள்ளை மரகதவல்லி

(நடுவில் பிள்ளை)

திதி: 12-12-2000

நல்லனவே செய்கையினால்
நாடுபோற்ற வாழ்ந்தவரே
கல்விக்கும் கடவுளுக்கும் கருதரிய
செயல் செய்தே
எல்லோரும் போற்றும்படி
இவ்வுலகில் புரந்தவளே
நில்லாமல் சென்றாய் நீ
நெஞ்சமது மறக்குதில்லை.

ஈராண்டு சென்றாலும் இதயத்தில்
தெய்வமம்மா
பாருலகில் ஒளிதந்து
பகலவன் போல் மறைந்தாயே
சேர்ந்தனையே தந்தைவழி
தேவுலகு அடைந்துவிட்டீர்
கார்த்திகையில் அபர பக்கத்
துதியையில் உன்நினைவே.

அன்னாரின் பாசமிகு
குடும்பத்தினர்

கரணவாய் வடக்கு,
உடுப்பிட்டி. (81566)

# நிரந்தரக் கட்டடம்

படான் பற்று சரஸ்வதி சனசமூக நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் விரைவில் நிறுவப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் வைபவம் சமீபத்தில் நடைபெற்றது.

வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சம்பிரதாய முறைப்படி அடிக்கல்லை நட்டார்.

இக்கட்டடத்தை நிறுவுவதற்கான நிதியினை வலி. தென்மேற்கு பிரதேச சபை ஒதுக்கீடு செய்துள்ளது.

# இலவச வகுப்பு

கொக்குவில், டிசெ 12

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் முறைசாராக் கல்விப் பிரிவின்கீழ் வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவச கணிதபாட வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதாகப் பாடசாலை அதிபர் த. அழகரட்ணம் தெரிவித்தார். [இ-69]

# பஸ் சேவை

ஊர்காவற்றுறை, டிசெ. 12

ஊர்காவற்றுறை பஸ் நிலையத்திற்கும் கரம்பன் கண்ணகை அம்மன் இறங்கு துறைக்கும் இடையில் விரைவில் பஸ்சேவை ஆரம்பிக்கப் படவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

கரம்பன் கண்ணகை அம்மன் இறங்கு துறைக்குச் செல்லும் வீதியைச் செப்பனிடும் பணிகள் தற்பொது நடைபெற்று வருவதாகவும் இப்பணிகள் பூர்த்தி அடைந்ததும் பஸ் சேவை ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். [இ-16]

# உதவிப்பணக் கொடுப்பனவு

தென்மராட்சி, டிசெ. 12

தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள்பிரிவினால் அண்மையில் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மாதாந்த உதவிப் பணம் மற்றும் காசநோய் புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளை டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்குமாறும் —

இக்காலப்பகுதிக்குள் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளாதவர்களின் உறுதிச் சீட்டுக்களைப் பிராந்தியக் கணக்காளருக்கு அனுப்புமாறும் —

யாழ். பிரதி அஞ்சல்மா அதிபர் ஏ. கே. சிவஞானசுந்தரம் சம்பந்தப்பட்ட அஞ்சல் அதிபர்களுக்கு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

வருங்காலங்களில் அஞ்சல்மா அதிபரின் அனுமதியின்றி இக்கொடுப்பனவுகள் வழங்கக்கூடாது எனவும் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-117)

ENGLISH
SPOKEN
AND
GRAMMAR

By: BRITTO

புதிய பிரிவு

ஆரம்பம்:-- 13-12-2000
புதன் கிழமை
காலை 7. 00
[பழைய நேரம்]

வகுப்புக்கள்:- திங்கள், புதன், வெள்ளி

இடம்:- கொக்குவில்
(ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)

(14223)

# கண்ணீர் அஞ்சலி

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய பிரதமகுரு

## சிவஸ்ரீ பால. ரவீந்திரக் குருக்கள்

அவர்கள் நீர்கொழும்பில் சிவபதமடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும் துயரும் அடைந்ததுடன் அமரரின் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அரியாலை
ஸ்ரீ ஞானவைரவர் கோயில்
இளைஞர் சங்கம்.

(81575)

# கண்ணீர் அஞ்சலி

வடமாகாண தாச்சி சங்கத்தின் கணக்காய்வாளர் அரியாலை ஆ. சண்முகநாதன் அவர்களினதும் சங்கப் பொருளாளர் செ. சண்முகலிங்கம் அவர்களினதும் தந்தையார்

## கதிரன் செல்லையாவின்

மறைவையொட்டி அவர்களின்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொளகின்றோம்.

வடமராகாணத் தாச்சிச் சங்கம்.

(81571)

கோப்பாய் மத்தி

அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

# தேர்முட்டி அடிக்கல் நடும் வைபவம்

நிகழும் விக்கிரம வருஷம் கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி (14 - 12 - 2000) வியாழக்கிழமை முற்பகல் 9-15 முதல் 10 - 15 மணி வரையுள்ள சுப நேரத்தில் அத்திவாரக்கல் நடப்படும்.

அடிக்கல் நடுபவர்:-

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி வலி கிழக்கு பிரதேச அமைப்பாளர் திரு. U. L. ரவி

சோதிடர்:- வே சிவாரமலிங்கம்
கோப்பாய் மத்தி கிராமசேவையாளர்
ஈ. ஜே. ரட்ணராஜா

அம்பாள் அடியார்களும்,
மாரியம்மன் ஐக்கிய சனசமூக நிலையமும்,
ஆலய பரிபாலன சபையும்.

[81566]

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை தவச்செல்வம் (தவம்)

தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தவச்செல்வம் நேற்று (11 -12 -2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் அன்னமுத்துவின் (அமெரிக்கா) அன்பு மகனும், ராசம்மாவின் அன்புக்கணவரும், தேவகி (B A) சிவகுமார் (சவூதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. கதிர்காமநாதன் (அமெரிக்கா), நாராயணமூர்த்தி (கனடா), சந்திரகாந்தன் (பொறியியலாளர் - அமெரிக்கா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(11-12-2000) திங்கட்கிழமை மாலை 4. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மூளாய் பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த. தேவகி
(மகள்)

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (81564)

## தங்கரத்தினம் சிவலிங்கம்

(வியாபாரி)

சுன்னாகம் குளாணைச் சேர்ந்த காலஞ்சென்ற தங்கரத்தினம் - ருக்குமணி ஆகியோரின் அன்பு மகனாகிய சிவலிங்கம் வவுனியாவில 10—12—2000 அன்று காலமானார்.

இவர் அன்னராணியின் அன்புக் கணவரும் பானுரேகா, சர்மிலி, துஷியந்தன், விஜியந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாம்பிகை, தவராசா, நிர்மலாதேவி, சுசிலா, யோகராசா, ரவி (வவுனியா), விக்னா (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிளிராசாமல்லிகாதேவி, ஜன்சிராணி, கலா ஆகியோரின் மைத்துனரும், காந்தன், வசந்தன், கௌசல்யா, சர்மிளா, மயூரன், திலீப் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(12-12-2000) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
சகோதரங்கள்.

குளாணை, சுன்னாகம் (81573)

## பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான பெனாஸிரின் சொத்துக்களை பிரிட்டிஷ் அரசு முடக்கியது

லண்டன், டிசெ. 12

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்குச் சொந்தமான, பிரிட்டனில் உள்ள சொத்துக்களை முடக்கி வைக்கப் போவதாக பிரிட்டிஷ் ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

பெனாஸிர் பாகிஸ்தானியப் பிரதமராகப் பதவி வகித்த சமயத்தில் அவரும், அவரது கணவர் ஆசிப் சர்தாரியும் ஊழல் புரிந்து சேர்த்த சொத்துக்களை மீட்கும் பணியில் பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

பெனாஸிர் பிரதமராக இருந்த காலத்தில், அவரது கணவர் முறைகேடாகச் செலவழித்த அரசுப் பணத்தை பெனாஸிர் குடும்பத்திடமிருந்து மீள அறவிடும் நடவடிக்கைகளையும் இராணுவ அரசு மேற்கொண்டுள்ளது.

பெனாஸிரின் ஊழல் சொத்துக்கள் தொடர்பாக பிரிட்டிஷ் அதிகாரிகளை இராணுவ அரசுப் பிரதிநிதிகள் நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தியிருந்தார்கள்.

இதனையடுத்தே பிரிட்டிஷ் அரசு பெனாஸிரின் சொத்துக்களை முடக்கி வைக்க முடிவு செய்துள்ளதாகக்கூறப்படுகிறது.

இதற்கிடையில் இராணுவப் புரட்சியின் பின்னர் பாகிஸ்தானிலிருந்து வெளியேறி பிரிட்டனில் தங்கியிருந்த பெனாஸிர் தனது சொத்துகள் முடக்கப்பட்ட அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு சில நாள்கள் முன்னதாக மேற்காசிய நாடொன்றுக்குச் சென்றுவிட்டார்.

பிரிட்டனில் தொடர்ந்து தங்கியிருந்தால் ஊழல் விசாரணைகளை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சத்தினாலேயே பெனாஸிர் மேற்காசிய இஸ்லாமிய நாடொன்றில் தஞ்சமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பெனாஸிரின் கணவர் ஆசிப் சர்தாரி ஊழல் வழக்கில் தண்டனை பெற்று பாகிஸ்தானில் சிறைத் தண்டனை அனுபவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-5-6)

## இஸ்ரேலியப் பிரதமர் தேர்தலில் வேட்பாளராக எகுட் பராக்



டெல்அவிவ், டிசெ. 12

இஸ்ரேலியப் பிரதமர் பதவிக்கான தேர்தலில் தொழிலாளர் கட்சி சார்பில் எகுட் பராக் போட்டியிட உள்ளார்.

இதற்கான அறிவித்தலை நேற்று முன்தினம் இஸ்ரேலிய தொழிலாளர் கட்சி உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளது.

இதே சமயம், பிரதான எதிர்க் கட்சியான லிகுட் கட்சி சார்பில் முன்னாள் பிரதமரான பெஞ்சமின் நெதன்யாகு போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இஸ்ரேலிய அரசமைப்புச் சட்டப்படி நெதன்யாகு பிரதமர் தேர்தலில் போட்டியிட விதிமுறைகள் இடம் கொடுக்க வில்லை என்று கூறப்படுகிறது.

அவர் வேட்பாளராக லிகுட் கட்சியால் அறிவிக்கப்பட்டால், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக பராக் தாப்பினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் அடுத்த பிரதமராவதற்கு பராக்கை விட நெதன்யாகுவுக்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக அங்கு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தேர்தல் திகதி அறிவிக்கப்படாத போதும் சட்டப்படி அடுத்து வரும் 60 நாள்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5-6)

## வல்லரசுகளுக்கு ஆதரவாகச் செயற்படும் ஐ. நா. நடுநிலைமை வகிக்கவில்லை எனத் தலிபான்கள் குற்றச்சாட்டு

காபூல், டிசெ. 12

ஐ. நா. நடுநிலை வகிக்கும் அமைப்பாகச் செயற்படுவதில்லை என்று ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் அமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தலிபான்களின் வெளியுறவுத் துறையினர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசு நாடுகளின் பேச்சுக்களுக்கு ஐ. நா. செவி சாய்க்கிறது. இப்போதும், ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் கடுமையான தடைகளை விதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளன.

இதனாலேயே ஆப்கானிஸ்தான் மீது தடைகளை விதிக்க ஐ. நா. பாதுகாப்புச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் சுய விருப்பத்துக்குக் கட்டுப்பட்டு ஆப்கானிஸ்தான் மீது ஐ. நா. தடைகளை விதித்தால் ஆப்கானிஸ்தானில் இயங்கி வரும் ஐ. நா. அரசியல் அலுவலகத்தை முடவேண்டி நேரிடும்.

அத்துடன் ஆப்கானிஸ்தானில் அமைதி நிலையை ஏற்படுத்த ஐ. நா, மேற்கொள்ளும் சமாதான முயற்சிகள் மற்றும் பேச்சுக்களைத் தலிபான் அமைப்புப் புறக்கணிக்கும். இவ்வாறு அறிக்கையில் தலிபான்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள சர்வதேசத் தீவிரவாதி ஒசாமா பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைப்பது உட்படப் பல்வேறு நிபந்தனைகளை ஆளும் தலிபான் அமைப்பினருக்கு விதித்துள்ள ஐ. நா. பாதுகாப்புச் சபை இவற்றைத் தலிபான்கள் நிறைவேற்றத் தவறினால், ஆப்கானிஸ்தான் மீது கடுமையான ஆயுதப் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று ஐ. நா. எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-5-6)


### யாழ். Y. M. C. A. சிற்றுண்டிச்சாலை கேள்விக் கோரிக்கை

யாழ். வை. எம். சி. ஏ. சிற்றுண்டிச்சாலை குத்தகைக்குக் கொடுக்க கேள்விக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளது.

முடிவு திகதி: 20-12-2000

கோரிக்கைகள் அனுப்பவேண்டிய முகவரி
Y. M. C. A,
109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(81578) - பொதுச் செயலாளர்

### குமரன் தொலைத் தொடர்பகம்

களபூமி, காரைநகரில் எமது வாடிக்கையாளர்களுக்கு புத்தாண்டை முன்னிட்டு குறைந்த கட்டணத்தில்

உள்நாடு 8/- 070 - 212978
வெளிநாடு 100/- 0094 - 212978
வரும் அழைப்பு 3/-

அறவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

குமரன் தொலைத் தொடர்பகம்
பிள்ளையார் கோயிலடி, களபூமி, காரைநகர்.
(31575)

### தேர்த் திருப்பணி

மல்லாகம் பழம்பிள்ளையார் திருமுருகன் கருமாரி தேவஸ்தானத்திற்கு
''ஜெனா கைவினைப் பொருள்கள் ஏற்றுமதி நிறுவன''
சிற்பக்கலாமணி
சரவணமுத்து ஜெயகாந்தன் குடும்பத்தினரால் தேர் செய்து கொடுக்கப்படவுள்ளது.

நேற்று (11-12-2000) நண்பகல் 12-00 மணிக்குத் தேருக்கான ஆரம்பவேலை திருநெல்வேலி சிற்பஜோதி சு. இராசரத்தினம் ஆச்சாரியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முத்தையாக் குருக்கள் நாகேந்திரசர்மா
ஆதீனகர்த்தாவும்,
பழம்பதி தேவஸ்தான சபையும்.

மல்லாகம். (81570)


## மகாராணியை கிளின்ரன் சந்திப்பார்

லண்டன், டிசெ. 12

பிரிட்டிஷ் மகாராணி 2 ஆம் எலிஸபெத்தை சந்திப்பதற்காக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் எதிர்வரும் 14 ஆம் திகதி லண்டனுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்.

கிளின்ரன் குடும்பத்துக்கும் மகாராணி குடும்பத்துக்கும் இடையிலான தனிப்பட்ட சந்திப்பாக இது இருக்கும் என்றும் —

பக்கிங்ஹாம் மாளிகையில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்றும் —

லண்டனின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எதிர்வரும் ஜனவரி மாதத்துடன் தனது பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்யும் அமெரிக்க அதிபர் கிளின்ரனின் இறுதி உத்தியோகபூர்வ விஜயமாக இது இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ம-8]

## நவாஸ்ஷெரீப்பின் சொத்துக்களை ராணுவ அரசு கையகப்படுத்தியது

இஸ்லாமாபாத், டிசெ. 12

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் அவரது குடும்பத்தினருக்குச் சொந்தமான சொத்துக்களை இராணுவ அரசு கையகப்படுத்தியுள்ளது.

ஷெரீப்பின் பெயரில் வங்கியில் இடப்பட்டிருந்த, 50 லட்சம் டொலர்கள் ரொக்கப் பணம், அவரது குடும்பத்தினருக்குச் சொந்தமான 5 காணித்துண்டுகள், 5 கைத்தொழில் நிறுவனங்கள் மற்றும் 60 ஏக்கர் பயிர்ச்செய்கைக் காணிகள் ஆகியவையே கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களாகும்.

வரி செலுத்தாமை மற்றும் குற்றவியல் குற்றங்களுக்காக நவாஸ் ஷெரீப் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தார். சமீபத்தில் அவரது சிறைத் தண்டனையை விலக்கி, குடும்பத்தோடு ஷெரீப் சவூதி அரேபியாவில் சென்று குடியேற அனுமதி வழங்கியதால் ஷெரீப் குடும்பத்தோடு சவூதி அரேபியா சென்று விட்டார்.

இதன் பின்னரே இராணுவ அரசு பாகிஸ்தானில் உள்ள சொத்துக்களைக் கையகப்படுத்தியுள்ளது.

நவாஸ் ஷெரீப்புக்கு வெளிநாடுகளில் பெருமளவு சொத்துக்கள் இருப்பதாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-5-6)

## இந்திய நாடாளுமன்றம் நேற்று ஆறாவது நாளாக ஸ்தம்பிதம்

புதுடில்லி, டிசெ. 12

எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டு அமளியில் ஈடுபட்டதால் இந்திய நாடாளுமன்றம் 6ஆவது நாளாக நேற்றும் ஸ்தம்பிதமடைந்தது

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் மத்திய புலனாய்வுத்துறையால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மத்திய அமைச்சர்களான எல். கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, செல்வி உமா பாரதி ஆகியோர் பதவி விலகக் கோரியும் பாபர் மசூதி இடிக்கப்பட்டதுக்கு ஆதரவாக சமீபத்தில் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்த கருத்துக்களைக் கண்டித்தும் இந்திய நாடாளுமன்றத்தில் 6 நாள்களாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று நாடாளுமன்றம் கூடிய போது பதவிவிலகலை வலியுறுத்திய எதிர்க்கட்சியினர் இது குறித்து விவாதம் நடத்தும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

அதனை நிராகரித்த சபாநாயகர் பாலயோகி, பாபர் மசூதி இடிப்பு தொடர்பான வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், விவாதம் நடத்த முடியாது என்று தெரிவித்தார்.

சபாநாயகரின் பதிலையடுத்து சபை மண்டபத்தின் மத்தியில் திரண்ட எதிர்க் கட்சியினர் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

அந்தச் சமயத்தில் ஆளும் கட்சியினர் எதிர்க் கூச்சலிட்டனர்.

இதனையடுத்து 6ஆவது நாளாக நாடாளுமன்றக் கூட்டத்தை சபாநாயகர் ஒத்தி வைத்தார்.

இந்திய நாடாளுமன்றம் ஒரு முறை கூடிக் கூட்டம் நடத்த, மக்கள் வரிப்பணத்திலிருந்து பல லட்சம் ரூபா செலவாவதாகக் கூறப்படுகிறது. (ஒ-5-6)

## வாஜ்பாய்க்கு ஜெயலலிதா வேண்டுகோள்

புதுடில்லி, டிசெ. 12

ராஜீவ் கொலை வழக்குக் குறித்த கண்காணிப்புக் குழுவின் இலங்கைப் பயணம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி கூறிய கருத்துக்களை இலங்கை அரசு மறுத்தது தொடர்பாகப் பிரதமர் வாஜ்பாய் விளக்கமளிக்க வேண்டும் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஊடுருவியவர்கள் சுட்டுக் கொலை

காஷ்மீருக்குள் ஊடுருவ முயற்சித்த 12 தீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்றதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை அதிகாலை சந்திராய் என்ற பகுதியில் பாகிஸ்தானிலிருந்து எல்லை தாண்டி இந்தியாவுக்குள் நுழைந்த போது இவர்கள் சுட்டு கொல்லப்பட்டுள்ளனர். (ஏ)

பொதுசன நூலகம்



# அற்புத கீர்த்திக்கும் ஆனந்த வாழ்வுக்கும் நற்கதிப் பேற்றுக்கும் விநாயகர் விரதம்

*இன்று ஆரம்பமாகும் விநாயக விரதத்தை யொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.*

ஓங்காரப் பொருளின் அருள் வடிவம் விநாயகப்பெருமான் குறை தீர்த்து, வினை தீர்த்து அருள் தரும் ஞான முதல்வன் ஆவர். ஞானத்துக்கும் மோட்சத்துக்கும் தலைவன். திக்கற்ற எளியவரைக் காப்பவர் கணபதி. நல்லாரை அறநெறியில் நடத்துபவர் விநாயகர். எங்களது துக்கத்தைத் தொலைத்து ஆனந்தம் தருபவர்.

விநாயகர் உடற் பலத்துக்கும் ஞானச் செழுமைக்கும் அடையாளமான கடவுள். எந்தக் காரியத்துக்கும் இந்த இரண்டும் தேவை. விநாயகரைச் சரணடையத் தெரிந்தவர்களுக்கு அழிவில்லை. "விக்ன விநாயக பாத நமஸ்தே!" என ஓத வினை அகலும். ஓங்கு புகழ் பெருகும் வெற்றி முகத்தையுடைய விநாயகப் பெருமானைத் தொழ எமது தொல்லைகள் பறந்தோடிடும்.

விநாயகப் பெருமானின் நாபி பிரம்ம சொரூபம். முகம் விஷ்ணுவின் அம்சம். கண்கள் சிவமயம். இடப்பாகம் சக்தி சொரூபம். வலப்பாகம் சூரிய சொரூபம் எனக் கணபதி ஸ்துதி கூறுகிறது. விநாயகப் பெருமானை வழிபடாத கடவுளே இல்லை. பிரம்மா, திருமால், சிவன், உமை, சூரியன் அனைவரும் பணிந்து ஏற்றிப் பெருமைபெற்றார்கள்.

## விநாயக தத்துவம்

யானை முகத்தின் வாயிலாகப் புகட்டப்படும் விநாயக தத்துவம் முக்கியமானது. ஓம் எனும் எழுத்து பல மொழிகளில் பல பாங்கில் எழுதப்படுகிறது. அத்தனை எழுத்துக்களுககும் பொதுவான இயல்பு உண்டு.

யானையின் காது, தலை, துதிக்கை ஆகிய மூன்றும் சேர்ந்து ஓம் என்பதன் பொது இயல்பாகின்றது. யானை முகத்தையுடைய கணபதி ஓங்கார மூர்த்தியாகத் திகழ்கின்றார்.

## கைகளில் அங்குசம், பாசம்

யானைப்பாகன் யானையை வேண்டியவாறு நடத்துவதற்கு தனது கைகளில் அங்குசம், பாசம் என்பவற்றை வைத்திருப்பார். அதுபோல ஜீவர்களை எல்லாம் நல்ல வழியில் நடத்த விநாயகக் கடவுள் தம் இரு கைகளிலும் அங்குசம், பாசம் என்பவற்றை வைத்திருக்கிறார். விநா



யகப் பெருமான் இரண்டு கைளில் தந்தமும், ஜபமாலையும் வைத்திருக்கிறார். தனது தந்தங்களில் ஒன்றை ஒடித்து எழுதுகோலாக கணபதி வைத்திருக்கிறார். கல்வி பயில்வதற்கு அது அறிகுறியாகிறது. சிந்தனா சக்தியை வளர்ப்பது அவசியம் என்பதை ஜபமாலை ஞாபகமூட்டுகிறது. யார் ஒருவன் எண்ணவும், எழுதவும் கற்றுக் கொள்கிறானோ அவன் நல்ல மனிதன் ஆகிறான். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற கோட்பாட்டை விநாயகப் பெருமான் எமக்குக் காட்டுகிறார். அறிவை வளர்க்க விரும்புபவர்கள் விநாயகப் பெருமானை ஆராதிக்க வேண்டும்.

ஐந்தாவது கரமாகிய துதிக்கையில் விநாயகர் தமக்கு விருப்பமான 'மோதகம்' என்னும் தின்பண்டத்தை வைத்திருக்கிறார். உணவு இன்றி உயிர் வாழ முடியாது. நல்லுணவை உண்டு உயிர் வாழவும், அறிவைப் பெருக்கவும், நல்வாழ்வு வாழவும் மனிதன் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை விநாயகப் பெருமானின் ஐந்து கரங்களும் விளககுகின்றன.

விநாயக தத்துவத்தை அனுட்டித்து வருபவர்களுக்கு தொடுத்த கருமங்கள் சித்தி பெறும். இலாபம் உண்டாகும் புத்தி(நல்லறிவு) வளரும் பிள்ளையாரைப் போற்றுகின்ற சிறுவர்கள் ஆற்றலும் அறிவும் பெறுவார்கள்.

விநாயகப்பெருமானுக்குரிய சிறப்பான விரதமாக விநாயக சஷ்டி விரதம் அமைகிறது. கார்த்திகை மாதத்து தேய்பிறை முதல் நாளில் தொடங்கி மார்கழி மாதத்து வளர்பிறை 6 ஆம் நாள் வரை இருபத்தொரு நாள்கள் விநாயக விரதம் அனுட்டிக்கப்படுகிறது. இவ்விரத நாள்களில் விநாயகர் ஆலயங்களில் பிள்ளையார் பெருங்கதை படிப்பு நடைபெறுகிறது.விநாயக விரதமிருந்து பெருங்கதை படித்து வேண்டும் வரங்களைப் பெறும் வழக்கம் சைவ மகள் மத்தியில் தொன்று தொட்டு நிலவி வருகிறது.

## பேறுகளும் நல் வாழ்வும்

அற்புத கீர்த்தி வேண்டின், ஆனந்த வாழ்க்கை வேண்டின், நற்பொருள்

**உடும்பிராய் நந்தன்**

குவிதல் வேண்டின், நலமெல்லாம் பெருகவேண்டின் கற்பக மூர்த்தியாம எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை விநாயக சஷ்டி விரத நாள்களில், உள்ளன்போடு ஆசார விதிப்படி வழிபட்டு, எல்லாப் பேறுகளையும் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக. ✻

---

15 வயதுக்கு உட்பட்டோருக்கான

# மாகாண கிரிக்கெட் அணியில் யாழ்ப்பாண வீரர்கள் நால்வர்

திருகோணமலை,டிசெ.12

வடக்கு கிழக்கு மாகாணத்தின் 15 வயதுக்குட்பட்ட கிரிக்கட் அணியில் இடம் பெறுவதற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு அணிகளுக்கும் யாழ்.மாவட்ட அணிக்கும் இடையில் கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற தெரிவு ஆட்டங்களில் இருந்தே இவ்வீரர்கள் தெரிவாகியுள்ளனர்.

வீ.ரஜீவ்குமார், சீ.மதுஷன், கே. றோகான், எம்.விஷ்ணுகாந்த் ஆகியோரே தெரிவாகியுள்ள யாழ். வீரர்களாவர்.

யாழ்.அணிக்கும் மட்டக்களப்பு அணிக்கும் இடையில் நேற்று இடம் பெற்ற தெரிவு ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சிவரூபன் 74 ஓட்டங்களையும் செந்தூரன் 37 ஓட்டங்களையும் ரஜீவன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ். அணி வீரர்களான வி.ரஜீவ்குமார் 34 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும் கே.கிருஷ்ணச்சந்திர ஐந்து ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் ரி.சி.அன்றூ 16 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.அணியினர் ஏழு விக்கட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றனர். மதுஷன் 64 ஓட்டங்களையும் றோகான் 62 ஓட்டங்களையும்,விஷ்ணுகாந்த் பத்து ஓட்டங்களையும் பெற்றனர்.மட்டுநகர் அணி வீரர் டிலோஜீதன் 27 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

## மூன்று இளைஞர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், டிசெ.12

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் இளைஞர்கள் நேற்று யாழ். நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

டக்ளஸ் ஜெனோ (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), சிறில் செல்டன் நிரோஸ்( புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர்), சுப்பிரமணியம் மேகநாதன்( மாரியம்மன் கோவில் வீதி, நல்லூர்) ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

மேற்படி மூன்று இளைஞர்களினதும் வழக்குகள் அனுராதபுரம் நீதிமன்றில் நடைபெற்றபோது இவர்களை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு அநுராதபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவினை அடுத்து சிறைச்சாலை அதிகாரிகளினால் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்ட மூவரும் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் இவர்களை விடுதலை செய்யுமாறு பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டார்.

(உ-5-6)

## தமிழர் மூவர் கைது

கொழும்பு,டிசெ.12

அப்புத்தளையில் உள்ள எரிபொருள் நிலையத்தைப் படம் எடுத்ததாகத் தெரிவித்து மூன்று தமிழ் இளைஞர்களைப் படையினர் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்த இளைஞர்கள் படையினரால் தீவிரமாக விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

(உ-3)

---

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 23 - 8 - 1927



மறைவு 10 - 12 - 2000

## அமரர் மளவராயர் வேலுப்பிள்ளை

(உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத் தாபகரும் முன்னாள் தலைவரும், இளைப்பாறிய செயலாளரும், நகரசபை - திருகோணமலை)

எமது சேவையைச் சார்ந்தவரும் யாழ்ப்பாண மாநகரசபையில் நீண்டகாலமாகக் கடமையாற்றியவரும் திருகோணமலை நகரசபைச் செயலாளராகக் கடமையாற்றி இளைப்பாறியவரும், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாக இருந்தவரும் எமது சேவையின் முன்னேற்றத்துக்கு தொழிற்சங்க ரீதியாகத் தன்னலம் கருதாது சேவையாற்றியவரும் சங்கத்தின் தலைவராக நீண்டகாலமாக உழைத்தவருமான ம. வேலுப்பிள்ளை அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய நன்றியுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/914/263) *உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம்.*

---

# அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக 2 ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் (வரவேற்புபசார விழா தொடர்பானது) இன்று (12. 12. 2000) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். அனைவரும் சமுகமளிக்கவும்.

(81587) **மாணவ பிரதிநிதி, 2ஆம் வருடம்.**

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் பொன்னம்பலம் தருமகுலசேகரம்**

(சைமன் - கிராம உத்தியோகத்தர்)

முதலாம் ஆண்டு நிறைவையொட்டி இன்று நினைவு கூருகின்றோம்.

*வலிகாமம் மேற்கு கிராம உத்தியோகத்தர்கள், சங்கானை.*

(C/14261)

---


# ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

☛ கடந்த மாதம் கொழும்புக்கு அனுப்பிய படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

☛ கொழும்பு மற்றும் பிறநாடுகள் அனைத்துக்கும் VIDEO CASSETTE அனுப்பிவைக்கப்படும்.

நல்லூர் T.P - 021-2604

புலோலி T.P - 070-212720

(81586)


---

# வட இலங்கை சங்கீத சபையினர் செலுத்தும் நினைவு அஞ்சலி

சங்கீத சபையின் உயர்தரப் பரீட்சகரும், ஆலோசகருமாக விளங்கிய இசை, நடன கலைக் களஞ்சிய ஆசிரியர்

**கானப்பிரியா**

**பிரம்மஸ்ரீ செ.ந.நடராஜ ஐயர்** அவர்களும்,

சபையின் பொருளாளராகவும் பரீட்சைக் குழு உறுப்பினராகவும் பல்லாண்டு காலம் பணிபுரிந்த

**சங்கீதபூஷணம்**

**சின்னத்தம்பி ஆறுமுகம்பிள்ளை** அவர்களும்,

இற்றைவரை உப செயலாளராகப் பணிபல புரிந்த

**கலா வித்தகர்**

**வேதவனம் தபோதநாயகம்**

அவர்களும் அண்மையில் அமரத்துவம் அடைந்தமை வட இலங்கை சங்கீத சபைக்கும் இசையுலகிற்கும் பேரிழப்பாகும். இம் மூவரும் சங்கீத சபைக்கும் இசைத் துறைக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இவர்களின் ஆன்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

வட இலங்கை சங்கீத சபையினர்.

*வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.*

(C/14266)

# மேலும் 387 குடும்பங்களுக்கு ஊர்காவற்றுறையில் கொடுப்பனவு

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீடு சேதமடைந்தோருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவின் முதற் கட்டக் கொடுப்பனவான 10 ஆயிரம் ரூபா மேலும் 387 குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளது.

எழுவைதீவில் 10 குடும்பங்களுககும், அனலைதீவில் 27 குடும்பங்களுக்கும் காரைநகரில் 202 குடும்பங்களுக்கும், ஊர்காவற்றுறையில் 148 குடும்பங்களுக்கும் இந்த முதற் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு உதவித் திட்டப் பணிப்பாளர் சி.குமாரசாமி சர்மா தெரிவித்தார்.

கிராம சேவையாளர்களிடம் உறுதிப்படுத்திய பின்னர் இன்று செவ்வாய்க்கிழமை முதல் வங்கிகளில் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.(ம-73)

## நோர்வே.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இலங்கை விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரதும் வேண்டுதலின் பேரில் இந்த முயற்சியில் அனுசரணையாளராக நாம் செயற்படுகின்றோம்.

"இரு தரப்பினரையும் நேருக்கு நேர் சந்திக்க வைத்து பிரச்சினைக்கு தீர்வு எட்ட வைப்பதே எமது நோக்கமாகும்.அதில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு"- என்றார். (உ-3)

## கொள்ளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவதினம் இரவு 8 மணியளவில் துப்பாக்கிகள் சகிதம் தனது வீட்டுக்குள் புகுந்த சிலர் தொலைக்காட்சிப் பெட்டியையும்,சைக்கிளையும் கொள்ளையிட்டுச் சென்றனர் எனவும்-

இது குறித்து விமானப்படை முகாமில் முறையிடவே தானும் அயலவர்களான மற்றைய இருவரும அங்கு சென்றதாக காயமடைந்தவர்களில் ஒருவரான ஸ்ரீபத்மநாதன் 'உதயன்' மட்டக்களப்புச் செய்தியாளரிடம் தெரிவித்தார். (உ-7-21)

## மட்டக்களப்பில் நேற்றுப் பேரணி

மட்டக்களப்பு,டிசெ.12

பொது மக்கள் பயணம் செய்யும் வாகனங்களில் படையினர் பயணம் செய்யக் கூடாது எனக் கோரி மட்டக்களப்பு நகரில் நேற்று அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட வைத்தியர் சங்கமும் மட்டக்களப்பு பொது வைத்தியசாலை ஊழியர் சங்கமும் இணைந்து இந்தப் பேரணியை ஒழுங்கு செய்திருந்தன.

பேரணியில் கலந்துகொண்டோர் கறுப்புப் பட்டிகளை அணிந்திருந்ததோடு யுத்தத்தை நிறுத்தக் கோரும் பதாகைகளையும் தாங்கிச் சென்றனர். ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்று அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (உ-7-21)

## யூரியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று இது குறித்துப் பேச்சு நடத்தியதை அடுத்து யூரியாவைக் குடாநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. - இப்படி அதில் உள்ளது.

*(இது தொடர்பாக முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)(உ-7)*

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும்.

அண்மைக் காலங்களில் நாங்கள் ஈட்டிய பெரு வெற்றிகள் இன்றைய சமகால நிகழ்வுகளுக்குக் காரணமாகும். இதனை நாம் தொடர்ந்து த்க்கவைக்க பலமாக இருக்கவேண்டும் - என்றார். (உ-164)


இதோ வெளிவந்துள்ளது

'கணனிப் பிரியனின்'

"கணனி வலை வேலை அமைப்பு ஓர் அறிமுகம்"
"INTRODUCTION TO COMPUTER NETWORK SYSTEM"

சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விலை ரூபா 25/- மட்டுமே!

DIRECTOR
JAFFNA COMPUTER COLLEGE
CHANKANAI

(C/14237)

IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2001

5000 மாணவர்களுக்கு



- பல்கலைக்கழக, தொழில்நுட்பக்கல்லூரி, பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றவகையில் நன்கு திட்டமிடப்பட்ட பாடவிதானங்களைக் கொண்டது.
- இப் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகும் ஓர் அரிய சந்தர்ப்பம்.
- ஆசிரியர்கள், அலுவலகர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறிகளைக் கொண்டது.

விண்ணப்பப்படிவங்களை நீங்கள் IIS அலுவலகங்களிலும், உங்கள் பாடசாலைகளிலும், பிரபல தனியார் கல்வி நிறுவனங்களிலும், அருகில் உள்ள பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 24/12/2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது



வருடம் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் இவ் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

மேலதிக விபரங்களுக்கு.....

Institute of Informatics Studies (IIS)

இன்றைய வீடியோ CD வெளியீடு

* என் சகியே
* திருப்புகள் மாற்றமடையும்

மூர்த்தி வீடியோ
மானிப்பாய்.

(C/14270)

பொருளியல்

S.ஜெயகுமார்

A/L 2001 DAY CLASS

பேரினப்பொருளாதாரம்
புதன் 11.00 மணி

SUBRA(14)
(D.M.I. யின் கிளை)
சித்தன்கேணி.

(81596)

NIRU TUITION CENTRE
கோண்டாவில்.

A/L DAY CLASSES
பொருளியல்

BY: திரு.P.சுண்

ஆரம்பம்: 11.12.2000
7.00-8.00 a.m.(S.L.T)

குறிப்பு: கிழமை நாள்களில் தினசரி வகுப்பு நடைபெறும்.

(C/14254)

கணக்கீடு
A/L 2001
DAY CLASS

- அலகு ரீதியான மீட்டலும் வினாவிடை வகுப்பும்
- கணக்கீட்டில் அறிவு குறைந்த மாணவர்க்கான விசேட பிரிவு

திரு S.D.J. சுதர்சன்

ஆரம்பம்: 13.12.2000
புதன் 8 மணி(ப.நே)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி-யாழ்.

(81588)

IBMS மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2001

எமது மாணவர்களுக்குத் தரமானதும், தகுதியானதும், அங்கீகரிக்கப்பட்டதுமான கணனிக் கல்வியை வழங்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட எமது நிறுவனம் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு கீழ்க்காணும் கற்கை நெறிகளுக்கு திறந்த போட்டிப்பரீட்சை ஒன்றின் மூலம் (பரீட்சைக்கட்டணமின்றி) 5000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

- Diploma in Desktop Publishing (4 Months)
- Diploma in Business Application (5 Months) (Ms Office உள்ளடங்கலாக)
- Diploma in Java Language (5 Months)
- Advanced Programming Specialist (6 Months)
- Diploma in Infomation Technology (8 Months)
- Higher Diploma in Software Engineering (12 Months)
- BIT கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகவல் தொழில் நுட்பப்பட்டப்படிப்பு. (3 Years)

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு January, April, மாதங்களில் கற்கை நெறிகள் ஆரம்பமாகும். A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட பிரிவு ஒன்று September மாதம் ஆரம்பிக்கப்படும்.

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பபடிவத்தை சுயமாகத்தயாரித்து, Director, IBMS, 701,K.K.S. Road, Jaffna. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

வடமராட்சி மாணவர்களின் நன்மைகருதி எமது கிளை நிறுவனம் M.M.V. வீதி, நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாதிரி விண்ணப்ப படிவம்

Full Name: ____
Address( Perm. & Tem.) : ____
N.I.C./ Special I.C. No. ____
Sex: ____ Date of Birth: ____
Course: ____
Signature: ____ Date: ____

Institute of Business Management Studies
IBMS

விண்ணப்ப முடிவு திகதி
24.12.2000

Head Office:
701, K.K.S. Road, Jaffna.
Branches:
Near M.P.C.S, Chankanai.
M.M.V. Road, Nelliyadi.

ACTOS
FITIS
BIT
1999-2000
ITrain
TVEC
NEICT

யாழ்நகரில் முதன்முதலாக மாபெரும் கண்ணிக்கண்காட்சி மிக விரைவில்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.